# அரசியல் பஞ்சாயத்து

இது மக்களுக்கான களம்

அரசியல் • ஆன்மிகம் • கலை • விழிப்புணர்வு • மாதம் இரு இதழ்

மே 1-15, 2022 மலர்: 01 இதழ்: 01



ஓமந்தூராரில் தலைமைச் செயலகம்..?



## அமைச்சர் உதயநிதி..?

ஆளுக்கு ஒரு பவுன்! அமைச்சரின் தாராளம்

பறிபோனது ஆளுநர் அதிகாரம்...

இலங்கை தமிழர் அவதி ஆண்டவன் சாபமா?



# மீண்டும் இடம் பெயர்கிறது தலைமைச் செயலகம்!



தமிழகத்தில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள தமிழக அரசின் தலைமைச் செயலகம் போதிய இட வசதி இன்றி இருப்பதால் 2006–2011 காலகட்டத்தில் அண்ணா சாலையில் உள்ள ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட முடிவு செய்யப்பட்டது. ரூ.750 கோடியில் பிரமாண்ட தலைமைச் செயலகம் முதல்வராக கருணாநிதி இருந்த காலத்தில் கட்டி முடிக்கப்பட்டு இடம் பெயர்ந்தது. 2 முறை சட்டசபை கூட்டத்தொடர் நடந்த நிலையில், பிற அலுவலகங்கள் முழுமையாக இடமாற்றம் செய்யப்படவில்லை. 2011ல்ஜெயலலிதா தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், ஓமந்தூரார் தோட்டத்தில் தலைமைச் செயலகத்தை மாற்றும் பணியை ரத்து செய்து அதை பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையாக அறி

## ஓமந்தூரார் தோட்டத்தில் கலைஞரின் கம்பீர சிலையுடன்..!

வித்தது. அதன்பிறகு அது ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனை ஆக்கப்பட்டது.இதை ரத்து செய்ய தொடரப்பட்ட வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன. அரசின் கொள்கை முடிவில் தலையிட முடியாதுஎன்று நீதிமன்றம் கூறியது.

இதன்பிறகு தொடர்ந்து பல்வேறு மாற்றங்களுடன் ஓமந்தூரார் தோட்டத்தில் தலைமைச் செயலக கட்டடங்கள் உருமாறின. நோயாளிகளின் வசதிக்காக படிக்கட்டுகள் இடிக்கப்பட்டு சாய் தளங்களாக மாற்றப்பட்டன. 400க்கும் மேற்பட்ட கழிப்பறைகள் கட்டப்பட்டன. அனைத்து நோய் சிகிச்சைகளுக்கும் தனித்தனி தடுப்புகள் வைக்கப்பட்டன. அங்கு தான் பன்னோக்கு உயர்தர அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில் கிண்டியில் ரூ.250கோடியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்று தி.மு.க.அரசு கடந்த ஆண்டு அறிவித்துள்ளது. ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனை என்பது மருத்துவமனைக்காக கட்டப்பட்டது அல்ல. அது அரசு நிர்வாக அலுவலகங்களுக்காக வடிவமைக்கப்பட்டது. அங்கு குறைந்த அளவிலேயே நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். இதன் பராமரிப்புக்காக மட்டும் ஆண்டுக்கு மூன்றரை கோடி செலவாகிறது.எனவே தான்கிண்டியில் பன்னோக்கு மருத்துவமனைக்காகவே புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அது கட்டி முடிக்கப்பட்டதும்,ஓமந்தூரார் மருத்துவமனை கிண்டிக்கு மாற்றப்படும். அது எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிகரானதாக இருக்கும் என்று அதிகாரிகள் கூறினர்.

அதன்பின்னர் ஓமந்தூரார் அரசினர் தோட்டம் மீண்டும் தலைமைச் செயலகமாக மாற்றப்படும்.அதற்கான ஏற்பாடுகள் விரைவில் செயல்படுத்தப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தநிலையில் தான் தற்போது ஓமந்தூரார் தோட்டத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் ஆளுயர கம்பீர சிலை வெண்கலத்தில் அமைக்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இருந்த அண்ணாசாலையில் சிலையை வைக்காமல், தலைமைச் செயலகம் அமைகிற போது அங்கு கலைஞரின் சிலை அமைக்கப்படுவதே பொருத்தமானதாக இருக்கும் என்று ஸ்டாலின் கருதுகிறார். அதற்கேற்ப இந்த மாற்றங்கள் செய்யப்படும் என்று கோட்டைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கருணாநிதி உயிரோடு இருக்கும் போதே அண்ணாசாலையில் திராவிடர் கழகம் சார்பில் சிலை வைக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். மரணம் அடைந்தபோது ஏற்பட்ட கலவரங்களில், கருணாநிதி சிலை தகர்க்கப்பட்டது. அதன்பிறகு அங்கிருந்த பீடமும் அகற்றப்பட்டது. அரை நூற்றாண்டு வரலாறு கொண்ட கலைஞர் சிலை இப்போது மீண்டும் அதே அண்ணா சாலையில் உள்ள ஓமந்தூரார் தோட்டடத்தில்அமைக்கப்படுவது பாராட்டுக்குரியது.


**அரசியல் பஞ்சாயத்து**

இது மக்களுக்கான களம்

அரசியல் • ஆன்மிகம் • கலை • விழிப்புணர்வு • மாதம் இரு இதழ்

**மே 1-15, 2022 மலர்: 01 இதழ்: 01**

T. ராஜேஷ்குமார் - **ஆசிரியர்**

**தலைமை நிருபர்கள் :**
சதிஷ்குமார்.க, மகேஸ்வரன்.ப, குமரேசன்

**சட்ட ஆலோசகர் :**
M.ராசிக் கான் B.A. B.L., D.பாஸ்கர் M.COM., B.L

**மாவட்ட நிருபர்கள் :**
பாரதி, சந்தோஷ்குமார், நிகில்

**நிருபர்கள் :** இளங்கோவன்.பி, கண்ணன்.து, வெங்கடேஷன்.க, சதிஷ்குமார், பிரியா

Website: www.arasiyalpanchayat.com

**Office Address:** 45 -A SRI KRISHNA TOWERS
2ND FLOOR, DR NANJAPPA ROAD, GANDHIPURAM,
COIMBATORE-641012. **Phone: 95852 66556**
**Email:** arasiyalpanchayat@gamil.com

# உதயநிதியை தேடி வரும் அமைச்சர் பதவி..!



தமிழகத்தில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. அமைச்சரவை கடந்த ஆண்டு மே மாதம் 7ம் தேதி பதவி ஏற்றது. அப்போதே தி.மு.க.வின் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதியும் அமைச்சர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை. இந்தநிலையில் தான் இப்போது ஆட்சி முடிந்து ஓராண்டு ஆன நிலையில் மீண்டும் உதயநிதி அமைச்சர் ஆக்கப்படுவார் என்ற தகவல்கள் வேகமாக பரவி வருகின்றன.

ஜுன் 3ம் தேதி கலைஞர் பிறந்தநாளன்று அமைச்சரவை விரிவாக்கம் இருக்கும் என்றும் அப்போது உதயநிதி அமைச்சர் ஆவார் என்றும் ஒரு தரப்பு கூறுகிறது. ஆனால் சிலதிரைப்படங்களில் அவர் நடித்து வருவதால்அந்தப் பணிகளை அவசர அவசரமாக முடித்து விட்டு அதன்பிறகே அமைச்சர் ஆவார் என்றும் இன்னொரு தகவல் தெரிவிக்கிறது. இதற்கிடையில் அவரது காரில் அரசு இலச்சினை பொறிக்கிற வகையில் வேலைகள் நடந்துள்ளன. இதனால் அமைச்சர் பதவி ஏற்பு என்பது வெகு விரைவில் இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில் உதயநிதிக்கு உள்ளாட்சி என்றே கூறப்பட்டது. ஆனால் தற்போது இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆவார் என்றே கணிக்கப்பட்டு உள்ளது. அதற்கு முன்பே விளையாட்டுத் துறை தொடர்பான ஒரு பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட உள்ளது. சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் ரூ.100 கோடியில் உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி வருகிற ஜுலை மாதம் நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்து வருகின்றன. உலக நாடுகள் அனைத்தும் உற்றுநோக்கும்போட்டி ஆகும். எனவே இதன் தொடக்கவிழாவை பிரமாண்டமாக சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் நடத்துகிறார்கள். இதற்கான பொறுப்பைத்தான் உதயநிதிக்கு வழங்கி உள்ளனர். தற்போது விளையாட்டுத்துறையின் அமைச்சராக உள்ள மெய்யநாதனுக்கு உறுதுணையாக உதயநிதி பல்வேறு பணிகளை செய்து வருகிறார். ஸ்பெயின் சென்ற கால்பந்தாட்ட வீரர்களுக்கு உதவித்தொகை மற்றும் பந்துகளை அமைச்சர் முன்னிலையில் உதய நிதி வழங்கினார். அவர் கால் பதிக்கிற முதல் ஆட்டமே உலகளாவிய அளவில் பெருமை பேச வேண்டுமே என்பதற்காகத் தான், உலகப்போட்டியை மையமாக வைத்து உதயநிதி விளையாட்டுத்துறையில் களம் இறங்குகிறார் என்கிறார்கள். இதெல்லாம் அமைச்சர் ஆவதற்கான முன்னோட்டமே என்கிறார்கள் அறிவாலயத்தில்..

அதற்கு முன்பே தற்போது நடந்து வரும் சட்டசபையில்

உதயநிதியை ஒவ்வொருவருமே வானளாக புகழத் தொடங்கி விட்டனர், புகழ்ச்சி காரணமாக உதயநிதியே வெட்கித் தலைகுனியும் அளவுக்கு ஜஸ் வைக்கிறார்கள்.எங்களின் சின்னவர் என்றே மின்துறை அமைச்சர்செந்தில் பாலாஜி புகழாரம் சூட்டினார்,

“பூவை போன்ற எழில் முகம். எப்போதும் நெஞ்சத்து பசுமை காட்டும் பொழில் முகம். தேனினும் இனிய குணம். வானினும் பெரிய மனம். பொல்லாத மனிதர்கள் வீசிடும் விமர்சன முட்கள் கூட பொன்னான உங்கள் முகத்தினால் புட்களாய் மாறி கம்பளம் விரிக்கும். வில்லேந்தி ஆயிரம் பேர் களத்தில் நின்றாலும், இனிமையான சொல்லேந்தி வென்று வரும் எங்கள் சின்னவரே! உள்ளங்களை வெல்வதையே கொள்கையாக கொண்டவரே!

நீங்கள் கலைஞரும் தலைவரும் கலந்தெடுத்த வார்ப்பு. அதனால்தான் தமிழகம் முழுவதும் உங்களின் மேல் ஈர்ப்பு. சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளை... திருவல்லிக்கேணியின் தங்கப்பிள்ளை... மாண்புமிகு அண்ணன் உதயநிதி அவர்களை வணங்குகிறேன்.” என கூறினார், செந்தில் பாலாஜியின் இந்த பேச்சு அவையில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. மறுநாள் அமைச்சர் பி.மூர்த்தியும் தன் பங்குக்கு உதயநிதி ஸ்டாலினை புகழ்ந்து பேசினார், அன்புக்கு இலக்கணமாம் ஆருயிர் உதயநிதி அவர்களே... நீங்கள் நடித்ததோ `ஒரு கல், ஒரு கண்ணாடி'. ஆனால் நீங்கள் வீசிய ஒரு செங்கல் கடந்த ஆட்சியை அல்லவா உடைத்து வீழ்த்தியது?நீங்கள் நடித்ததோ `கெத்து'... நீங்கள்தான் தமிழ்நாட்டின் சொத்து. எதிரிகளை தனது சிரிப்பால் நண்பேண்டா என்று சொல்ல வைக்கும் அன்பன் நீங்கள்! உங்கள் நடிப்பில் உருவானதோ மனிதன். நிஜத்தில் நீங்கள்தான் `மாமனிதன்'. நீங்கள் நிமிர்ந்தபோது தமிழ்நாட்டில் இளைஞர்கள் நிமிர்ந்தார்கள். `இப்படை வெல்லும்‘ என்றீர்கள். இப்படைதான் எப்போதும் வெல்லும் என்பதை நித்தமும் காட்டிக்கொண்டு இருக்கிறீர்கள்.



இது பற்றி சட்டசபை கூட்டத் தொடரில் உதயநிதி ஸ்டாலின் பதில் அளித்தார். என்னை பலரும் சின்னவர் என்றும் சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளை என்றும் அழைக்கிறார்கள். இங்குள்ள தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் அனுபவத்துடன் ஒப்பிடுகையில், நான் சின்னவன் தான். மக்களுக்கு செல்லப்பிள்ளையாக இருந்து மக்கள்பணியாற்றவேண்டும் என்பதே என் விருப்பம். அதற்கு உங்கள் அனைவரின் அன்பையும் ஆலோசனையையும் வழங்கி வழிகாட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

முதல்வர் ஸ்டாலின் செயல்பாட்டை அனைத்துக்கட்சியினரும்பாராட்டினாலும், Stalin is more dangerous than kalaignar என்பது தான் நம் முதல்வருக்கு கிடைத்த மிகப்பெரிய பாராட்டு என்றும் உதயநிதி சுட்டிக்காட்டினார்.

சின்னவர் என்று உதயநிதியை இப்போது அழைத்தாலும், எப்படியோ தாத்தாவைப் போல பேரனும் அரசியலில் உறுதியான களம் அமைப்பார் என்பது மட்டும் உறுதி.



# அம்பேல்..!

# ஆளுநர் அதிகாரம்!!

மாநில கவர்னர் பதவி என்பது ஆட்டுக்குத் தாடி முளைத்தது போலத்தான்.. என்றார் பேரறிஞர் அண்ணா. கவர்னர்பதவி என்பது தேவையில்லாதது. அது போஸ்ட்மேன் பதவி மாதிரி. மாநில அரசுகள் நிறைவேற்றும் மசோதாவை மத்திய அரசுக்குஅனுப்பி மட்டுமே வைக்கிற போஸ்ட்மேன் வேலை பார்க்கிற கவர்னருக்கு மக்கள் வரிப்பணத்தில் மாட மாளிகை தேவையா? மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அமைச்சரவையை, கண்காணிக்க ஒரு நியமனப்பதவி தேவையா? கவர்னர் பதவி என்பதையே ஒழிக்கவேண்டும் என்று ஆட்சிக்கு வரும் முன்பே போர்க்கொடி தூக்கிய கட்சி தான் தி.மு.க.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது எல்லாம் ஆட்சியை கலைக்கப் போகிறோம் என்று கவர்னருக்கு காவடி தூக்குவதே மத்தியில் ஆளும்கட்சியாக இருக்கிறவர்களுக்கு வேலையாகி விட்டது. இப்போது மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. ஆட்சி நடக்கிற

போது மத்தியில் ஆளுகிற பா.ஜ.,வுக்கு தமிழக அரசு மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதே ஒற்றை குறிக்கோள் ஆகிவிட்டது. தூசி விழுந்தால் கூட பூகம்பமே ஏற்பட்டதாக கூறி களேபரத்தில் ஈடுபடுகிறார்கள். மாநில அரசின் அதிகாரத்தை பறிக்கிற வகையில், உயர்கல்வித்துறைக்கே தெரிவிக்காமல் துணை வேந்தர்கள் மற்றும் துறைத்தலைவர்கள் மாநாட்டை தன்னிச்சையாக கூட்டினார் கவர்னர். இணை வேந்தரான அந்தத்துறையின் அமைச்சருக்கே அழைப்பில்லை. இந்த மாநாட்டில் பேசிய கவர்னர், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவித்தால் அவர்களுக்கு கருணை காட்டப்படாது என்றார். இந்தியா ஒரே நாடு... ஒரே குடும்பம்.. இங்கு எந்தவித சமூக ஏற்றத்தாழ்வும் கிடையாது. 2047ம் ஆண்டு சர்வதேச அளவில் இந்திய முன்னிலை வகிக்கும் வகையில் கல்வியில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும். அதற்கான திட்டமிடுதலில் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் ஈடுபடவேண்டும் என்று கவர்னர் கேட்டுக்கொண்டார். இந்தியாவில் 70 சதவீத மாணவர்கள் கலை, அறிவியல் பாடங்களையே எடுத்து படிக்கிறார்கள். அவர்கள் கல்லூரியை விட்டுவெளியே வரும்போது திறமையானவர்களாக இருக்கவேண்டும். முதன்மைநாடாக இந்தியாவை கொண்டு செல்ல துணை வேந்தர்கள் துணை நிற்கவேண்டும் என்றும் கவர்னர் வலியுறுத்தினார்.

இணைவேந்தரையே அழைக்காமல் துணை வேந்தர்கள் மாநாட்டை கவர்னர் நடத்திய அதே நேரத்தில் தான் தமிழக சட்டசபையில் கவர்னருக்கே ஆப்பு வைக்கும் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டது. கவர்னரின் அதிகாரத்தை பறிக்கிற வகையில் தமிழ்நாடு பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை தமிழ்நாடு அரசே நிமியக்க வழி வகுக்கும் சட்ட முன்வடிவு சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டது. இதன் நியாயத்தை விளக்கிப் பேசிய உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, கவர்னர் என்பவர் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர் அல்ல. மத்திய அரசால் நியமிக்கப்பட்டவர். ஒரு நியமனக்காரர், எப்படி மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டஅமைச்சரவையின் அதிகாரங்களை பறிக்கிற வகையில் அரசாங்கம் நடத்த முடியும்... எனவே தான் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அமைச்சரவைக்கு தலைமை வகிக்கிற முதல்வரே வேந்தராக இருக்க வேண்டும். அவரே துணை வேந்தர்களை தேர்ந்து எடுக்கட்டும். அதற்காகத்தான் இந்த மசோதா என்று விவரித்தார்.

பிரதமர்மோடி காலம்தொட்டு குஜராத் மாநிலத்தில் முதல்வர் தான் துணை வேந்தர்களை நியமிக்க அதிகாரம் படைத்தவர் என்று சட்டம் உள்ளதையும் அவர் எடுத்துரைத்தார். இந்த சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம்தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிக்கும் கவர்னரின் அதிகாரம் பறிக்கப்பட்டு உள்ளது. அரசியல் அமைப்பு சட்டப்படி இது கவர்னருக்கான அதிகாரம் அல்ல. மாநில அரசு தந்த கவுரவம். தற்போது அந்த கவுரவத்தை வாபஸ் பெற்றது மாநில அரசு. ஊட்டியில் துணை வேந்தர் மாநாட்டை ஆளுநர் ரவி நடத்திக்கொண்டிருந்த வேளையில் அவரது அதிகாரத்தை பறித்து முதல்வர் ஸ்டாலின் நடவடிக்கை எடுத்துள்ளது மோதலின் உச்சகட்டம் ஆகும்.

இந்த மசோதாவுக்கு வழக்கம் போல அ.தி.மு.க.வும், பா.ஜ.வும் எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தது. தமிழகத்தின் சுயாட்சிக்கு குந்தகம் ஏற்படுத்துகிற கவர்னரின் செயல்பாட்டை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தியவர் ஜெயலலிதா. அவர் வழி வந்த இன்றைய அ.தி.மு.க.வினரோ பா.ஜ.வின் அடிமைக்கட்சியாகவே மாறி விட்டது என்று தி.மு.க. குற்றம்சாட்டுகிறது. இதற்கு அ.தி.மு.க. தரப்பில் எந்தப் பதிலும் அளிக்க முடியாமல் கூனிக் குறுகி நிற்கிறார்கள்.



# உள்கட்சி தேர்தலிலும் வேண்டாம் உள்குத்து!

ஜெயிக்கிற குதிரை மீது பணம் கட்டுவது தான் குதிரைப் பிரியர்களின் வாடிக்கை. அதே போலத் தான் ஆளுகிற கட்சியில் இருப்பதே அரசியல்வாதிகளின் பொழுது போக்காகி விட்டது. இதனால் தான் தற்போது தமிழகத்தில் ஆளும் தி,மு,க.வில் புதிய வரவுகள் அதிகரித்து விட்டன. . குறிப்பிட்ட சில ஆண்டுகள் கட்சியில் இருந்தால்தான் உள்கட்சி தேர்தலில் போட்டியிட முடியும் என்பது விதியாக இருந்தாலும், இந்த விதிகள் சிலருக்காக தளர்த்தப்படுகின்றன. அதனால் தான் வந்ததுமே சிலருக்கு பதவி கிடைத்து விட்டது. பாரம்பரியமாக உள்ள உடன்பிறப்புகளில் பலரும் இன்னமும் கொடி தூக்குகிற, போஸ்டர் ஒட்டுகிற தொண்டனாகத்தான் இருக்கிறார்கள்.

இதன் விளைவு .. தி.மு.க.வில் உள்கட்சி பூசல்கள் அதிகரித்து விட்டன. தி.மு.க.வில் தொடர்ந்து பலரே மாவட்டச்செயலாளர்களாக உள்ள நிலையில்சட்டசபைத் தேர்தலுக்கு முன்பாக நிர்வாக வசதிக்காக2 அல்லது 3 தொகுதிக்கு ஒரு மாவட்டச் செயலாளர் என நியமிக்கப்பட்டனர். அரசின் நிர்வாக வசதிக்காக 38 மாவட்டங்கள் தற்போது உள்ளன. ஆனால் தி.மு.க.வில் இதன் எண்ணிக்கை 70 ஐ தாண்டி விட்டது. ஆளுக்கு 2தொகுதி என்ற ரீதியில் வெற்றியை உறுதி செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த மாவட்ட பிரிப்பு நடந்தது. ஆனால் நடந்ததோ வேறு மாதிரி. சில மாவட்டங்களில் மாவட்ட பொறுப்பாளர்களே தோற்றனர். உதாரணத்துக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த கதை. நாகர்கோவிலில் சுரேஷ்ராஜனும், கன்னியாகுமரியில் ஆஸ்டினும் போட்டியிட்டனர். ஆனால் இருவருமே தோற்றனர். இவர் ஜெயித்தால் மந்திரி ஆகி விடுவாரோ என்ற எண்ணத்தில் நடந்த உள்ளடி வேலைகளே தோல்விக்கு காரணம். இதே போலத் தான் சிலமாவட்டங்களில்மாவட்ட பொறுப்பாளர்கள் தோற்க நேரிட்டது. உள்ளாட்சி தேர்தல்களிலும் இந்த கீழடி வேலைகள் நடந்தன. இதன் விளைவாக தி.மு.க.வின் வெற்றிவாய்ப்புகளை உள்கட்சியினரே பறித்தனர்.. குறிப்பாக பிற கட்சிகளில் இருந்து வந்து பொறுப்பாளரானவர்கள் எல்லாம் தன்னுடன் வந்த ஆதரவாளர்களை குஷிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனரே தவிர, பரம்பரை தி.மு.க.வினரை மறந்தே விட்டனர். தூத்துக்குடி மாவட்டத்தில் பொறுப்பாளர்கள் இருவருமே அமைச்சர்கள். கீதாஜீவன், தி.மு.க. பரம்பரை. ஆனால் அனிதா ராதாகிருஷ்ணனோ, அ.தி.மு.க.வில் இருந்து வந்து மாவட்ட பொறுப்பாளராகி அமைச்சரும் ஆகி விட்டார். ஆனால் அவரது

# தி.மு.க. தலைமைக்கு உ.பி.க்கள் உஷார் கடிதம்

செயல்பாடுகள் எல்லாம் பரம்பரை தி.மு.க.வினரை ஓரம் கட்டும் முயற்சியிலேயே இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இது பற்றி முதல்வர் ஸ்டாலின் தூத்துக்குடி வந்த போதே கண்ணீரும் கம்பலையுமாக தி.மு.க. நிர்வாகிகளே முறையிட்டனர். தங்களுக்கு துரோகம் இழைப்பதாக அனைவர் முன்னிலையிலுமே அனிதா மீது குற்றம்சாட்டப்பட்டது. இது பற்றி விசாரணை நடத்த முதல்வர் ஸ்டாலினும் உத்தரவிட தற்போது விசாரணை அறிக்கையும் முதல்வரின் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளது. அதில் அனிதா மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்.

நெல்லை மாவட்ட தி.மு.க.விலும் 3 பொறுப்பாளர்கள் மீதும் குற்றம் சாட்டப்படுகிறது. முன்னாள் சபா. ஆவுடையப்பனின் ஆதிக்கம் காரணமாகவே தொடர்ந்து 2 முறை அம்பை தொகுதியில் அவர் தோற்றார் என்கிறார்கள் உ.பி.க்கள். தி.மு.க. மாநில வர்த்தகர் அணி துணைத்தலைவராக இருந்த அய்யாத்துரை பாண்டியன், கடையநல்லூர் தொகுதியை குறி வைத்து சொந்தப் பணத்தை தாராளமாக செலவழித்தும் அவருக்கு சீட் கிடைக்காமல் கூட்டணி கட்சிக்கு அதை தாரை வார்த்துவிட்டார் என்றும குற்றம் சாட்டப்படுகிறது. இதனால் அவர் வேறு கட்சியில் போட்டியிட்டதால் தி.மு.க. கூட்டணி கட்சி தோற்க நேர்ந்தது.

மாநகர் மாவட்டச் செயலாளர் வகாப் இப்போது மா.செ.+ எம்.எல்.ஏ. என்ற இரட்டைப் பதவியில் இருப்பதால் அவர் சொன்னதே சட்டம் என்றாகி விட்டது. இவர் கருப்பசாமி பாண்டியனின் ஆதரவாளராக இருந்தவர்என்பதால் அ.தி.மு.க.வில் இருந்துவந்தவர்களுக்கே சாதகமாக செயல்படுவதாக உ.பி.க்கள் குற்றம்சாட்டுகின்றனர். கரூரிலும் அமைச்சர் செந்தில் பாலாஜி மீது பகிரங்கமாகவே உ.பி.க்கள் பழி சுமத்துகின்றனர். அவரது பணபலத்தின் முன்னால் சிலபரம்பரை தி.மு.க.வினரே வளைந்து கொடுத்துச்செல்கிறார்கள். புதுக்கோட்டையில் அமைச்சர் ரகுபதிக்கு, இன்னமும் அ.தி.மு.க . மீதான கரிசனப் பார்வைக்கு குறைச்சலே இல்லைஎன்கிறார்கள். விருதுநகரில் சாத்தூராரும், பழைய கட்சி பாசத்திலேயே அவர்களுக்கு சாதமாக காய் நகர்த்துவதாக கூறப்படுகிறது. முக்கிய அமைச்சராக உள்ள திருவண்ணாமலை வேலு, தன்னை விட சீனியரான துணை சபா. பிச்சாண்டியையே ஒரம்கட்டிவிட்டார் என்கிறார்கள்.

தலைநகர் சென்னையிலும் அமைச்சர் சேகர்பாபு அப்படித்தான் செயல்படுவதாக பரம்பரை தி.மு.க.வினர் குற்றம்சாட்டுகின்றனர். எந்தஒரு விழா என்றாலும் அவரதுபெயரை யார் மேடையில் உச்சரித்தாலும்,தனியாக கைதட்டல்கள்எழுகின்றன. இப்படித்தான் நெல்லை மாவட்டத்தில் தனிராஜ்யம்நடத்திய வைகோ, பின்னர், தி.மு.க.வை எதிர்த்தே குரல்கொடுத்தார் என்றும் உதாரணமாக கூறுகின்றனர் உ.பி.க்கள்.

இப்போதுஉள்கட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளில் ஜனநாயக ரீதியில் ஓட்டுபோட்டு நிர்வாகிகளை தேர்ந்து எடுக்கும் ஒரேகட்சி தி.மு.க. தான் என்பது உலகமறிந்த உண்மை. தி.மு.க. தேர்தலைப் பார்த்து வெளிநாட்டினரே வியந்தனர். இந்த நிலையில் உள்கட்சி தேர்தலில் பரம்பரை தி.மு.க.வினரை ஓரம் கட்டும் முயற்சியிலும் இப்போதைய வந்தேறி மா.செ.க்கள் ஈடுபடுவார்கள் என்று உ.பி.க்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். கட்சியின் தேர்தலுக்கு போட்டியிட தயாராக உள்ள பரம்பரை தி.மு.க.வினர், உறுப்பினர் பட்டியல் கேட்டால் அதை தருவதற்கு மா.செ.க்கள் மறுக்கிறார்கள்என்ற புதிய குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. கட்சியின் வெற்றிக்காக நடந்த மாவட்டபிரிவினைகள், தற்போது புதிய புதிய கோஷ்டிகளை உருவாக்கி விட்டன.

பாமர மக்களின் முன்னேற்றக் கழகம் என்று பாடப்பட்டதி.மு.க.வில், பரம்பரை தி.மு.க.வினர்+ மாற்றுக்கட்சிகளில் இருந்து வந்தவர்கள் என்ற பிரிவினை உருவாகி விட்டது. கரை வேட்டிகளை மாற்றியவர்கள் சாதிக்கிறார்கள். ஒரே கட்சி ஒரே கொள்கை என்ற ரீதியில் வாழ்கிறவர்கள் எல்லாம் ஓரம் கட்டப்படுகிறார்கள். பொதுத்தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல்களில் நடந்த உள்ளடி வேலைகள்,உள்கட்சி தேர்தலிலும் நடந்திடுமோ என்ற அய்யப்பாடு நிலவுகிறது. எனவே மாவட்டத்துக்கு ஒரு மேற்பார்வையாளரை நியமித்து அவர் மூலமாகவே உறுப்பினர் பட்டியலை வழங்கிடவும் நியாயமான தேர்தலை நடத்தவும் ஆவன செய்ய வேண்டும் என தி.மு.க. தலைமைக்கு பரம்பரை தி.மு.க.வினர் கோரிக்கை விடுத்து கடிதம் எழுதி உள்ளனர். அந்த மேற்பார்வையாளர்கள் எதற்கும் விலைபோகாதவர்களாக இருக்கவேண்டும் என்பதும் அவர்களின் எதிர்பார்ப்பு.

தி.மு.க.தலைமை இதற்கு செவி சாய்க்குமா?



# ஆளுக்கு ஒரு பவுன்!

## தி.மு.க. அமைச்சரின் தாராளம்

தமிழகத்தின் தென்கோடி மாவட்டம் தூத்துக்குடி. இதன் மாவட்டச் செயலாளராக கலைஞரின் முரட்டுப் பக்தன் என்றழைக்கப்பட்ட பெரியசாமி இருக்கிற வரை அந்த மாவட்டம் பிரிக்கப்படவே இல்லை. அவர் காலமானதும், மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டது. வடக்கு மாவட்டம் என்று தூத்துக்குடி, கோவில்பட்டி,விளாத்திகுளம் ஆகிய தொகுதிகள் சேர்க்கப்பட்டு அதன் பொறுப்பாளராக கீதா ஜீவன் நியமிக்கப்பட்டார். திருச்செந்தூர், திருவைகுண்டம்,ஒட்டப்பிடாரம் ஆகிய தொகுதிகளை உள்ளடக்கி தூத்துக்குடி தெற்கு மாவட்டம் ஆக்கப்பட்டு பொறுப்பாளராக அனிதாராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டார். பெரியசாமி தலைமையில் ஒரே மாவட்டமாக இருந்த போது ஒற்றுமையுடன் காணப்பட்டது. ஆனால் இரண்டாக பிரிக்கப்பட்டதும்,வடக்கு மாவட்டத்தை எதிரியாகவே தெற்கு மாவட்டம் பாவிக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டது. தேவையில்லாமல் தூத்துக்குடி நகர்ப்புற பகுதியிலேயே தெற்கு மாவட்ட அலுவலகத்தை திறந்து விழாக்களை நடத்துகிறார் என்று அனிதா மீது வடக்கு மாவட்டம் குற்றம் சாட்டுகிறது.

இருவருமே தற்போது அமைச்சர்களாக இருந்தாலும், தெற்கு மாவட்டத்தில் பரம்பரை தி.மு.க.வினரை புறக்கணித்து விட்டு அ.தி.மு.க.வில் இருந்து தாவியவர்களுக்கு பதவி தருவதிலேயே குறியாக இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் பெரியசாமி விசுவாசிகளை முற்றிலுமாக புறம்தள்ளி வருகிறார் அனிதா என்றும் பரம்பரை தி.மு.க.வினர் குறை கூறுகின்றனர். உள்ளாட்சித் தேர்தலிலும் இந்த குற்றச்சாட்டு எதிரொலித்தது. கட்சிதாவியவர்களுக்கே முன்னுரிமை அளித்ததாக முதல்வர்ஸ்டாலின் முன்னிலையிலேயே மோதல் வெடித்தது. உள்கட்சித் தேர்தலிலும் பெரியசாமி



ஆதரவாளர்களை முற்றிலும் கருவறுக்கும் முயற்சியில் அனிதா இறங்கி விட்டதாகவே எதிர் அணியினர் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்தநிலையில்கட்சியினர்மீதுஅனிதாவுக்கு திடீர்பாசம் வந்து விட்டது. அவரது சொந்தஊரான தண்டுப்பத்தில், தி.மு.க.வினருக்கு ஆளுக்கு ஒரு பவுன் தங்க மோதிரம் பரிசளிக்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. ஏன் மோதிரம்? கனிமொழி வெற்றிக்காக உழைத்தவர்களுக்கு பரிசு என்று, கிளை,நகரச்செயலாளர்கள் மற்றும் தன்னுடைய விசுவாசிகளுக்கு மோதிரம் அணிவிக்கப்பட்டது. இதற்காக சென்னை ஜெயசந்திரா நகைக்கடையில் இருந்து மோதிரங்கள் வாங்கப்பட்டு உள்ளன. சென்னையில் இருந்து இசைக்கலைஞர்கள் வரவழைக்கப்பட்டு கச்சேரியும் நடத்தப்பட்டு உள்ளது. தி.மு.க. மா.செ. ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் அ.தி.மு.க. விழா போல எம்.ஜி.ஆர். பாடல்களே பாடப்பட்டன. போதாக்குறைக்கு அனிதாவும் ஒரு எம்.ஜி.ஆர். பாடலைப் பாடி தனது விசுவாசத்தை காட்டிக்கொண்டார். மொத்தத்தில் தி.மு.க. லேபிளுடன் அ.தி.மு.க.விழாவாகவே அரங்கேற்றப்பட்டது. அறுசுவை விருந்தும் நடைபெற்றது.

கனிமொழி வெற்றி பெற்று 3 ஆண்டுகள் ஆன நிலையில் இப் போது ஏன் இந்த திடீர்விழா என்றே தி.மு.க.வினர் இடையே கேள்வி எழுந்துள்ளது. கோடியைத்தாண்டிய செலவுக்கு அமைச்சர் அனிதா என்ன செய்தார்... என்றே கேட்கிறார்கள்.

அதே சமயத்தில் மாவட்டத்தில் இரு அமைச்சர்கள் இருந்த போதிலும், கட்சிக்காரர்களின் பிள்ளைகளுக்கு எந்த வேலையும் கிடைத்த பாடில்லை. சத்துணவு அமைப்பாளர் அல்லது கால்நடைத்துறை, மீன்துறையில் ஏதாவது உதவியாளர் வேலை கூட கட்சிக்காரர்களுக்கு கிடைக்கவில்லை. தலையாரி வேலைக்கு கூட 10 லட்சம்ரூபாய் கேட்கிறார்கள் என்று தான் கட்சிக்காரர்களிடம் புலம்பலாக உள்ளது. பெரியசாமியை பிடிக்காதவர்கள் கூட, அவரால் ஓரம் கட்டப்பட்ட முன்னாள் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ. மற்றும் ம.தி.மு.க.வில் இருந்து வந்த முக்கிய பிரமுகர்களிடம் பேசிய போது, அண்ணாச்சியை (பெரியசாமி) சேர்த்துக் கொள்ளலாம். அவரை யாரும் மீறக்கூடாது என்று நினைப்பார். கட்சி என்று வந்தால் ஒன்றாகிவிடுவார். ஆனால் அனிதா மிகவும் ஆபத்தானவர் என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்டவரை வைத்து எப்படி தூத்துக்குடியில் மீண்டும் கனிமொழி ஜெயிக்கப் போகிறார்? அனிதா இருந்தால் மட்டும் போதுமா... பரம்பரை கட்சியினரையும் அனுசரித்துச் சென்றால்தானே வெற்றிக்கனியை கனி பறிக்க முடியும். அதற்கு கனி இப்போதே கனிவாக வேண்டாமா...?

# எம்.ஜி.ஆர். பாடல் பாடி அசத்தல்



# கொடநாடு மர்ம முடிச்சு அவிழ்கிறது



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கோடையில் தங்குவதற்காகவே உருவாக்கப்பட்ட மாளிகை தான் கொடநாடு பங்களா. தேயிலை தோட்டத்துடன் கூடிய இந்த பங்களா, தற்காலிக தலைமைச் செயலகமாகவே உருமாற்றப்பட்டது.பல மாதங்கள் அங்கேயே தங்கி இருந்து அரசிலையும் ஆட்சி நிர்வாகத்தையும் கவனித்தவர் ஜெயலலிதா. அவரது மறைவுக்கு பின்னர் சசிகலா கைதான நிலையில் அந்த பங்களாவும் பல சர்ச்சைகளில் சிக்கி தவித்தது. எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருந்த போது கடந்த 2017 ம் ஆண்டு ஏப்ரல் 14ம் தேதி கொடநாடு பங்களாவில் காவலாளி ஓம் பகதூர் கொலை செய்யப்பட்டார். அங்கிருந்த பணம்,நகைகள் மற்றும் ஆவணங்கள் காணாமல் போயின. இதை அரங்கேற்றியவர்கள் யார் என்று போலீசாரால் இது வரை விடைகண்டுபிடிக்கவே முடியவில்லை. கொடநாடு எஸ்டேட் மேலாளர் நடராஜன், ஜெயா டிவி நிர்வாக இயக்குநர்களில் ஒருவரான விவேக் ஜெயராமன், முன்னாள் எம்.எல்.ஏ. ஆறுக்குட்டி உள்பட 200 க்கும் மேற்பட்டவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டும் துப்பு துலங்கவே இல்லை. அப்போது ஆட்சியில் இருந்த முக்கிய புள்ளிகளுக்கு இதில் தொடர்பு இருப்பதால் மர்மமுடிச்சுகளுக்கு விடை கிடைக்கவே இல்லை.

## 500 கேள்விகள் டக் டக் பதில்கள்



இந்த நிலையில் டெகல்கா பத்திரிகையின் ஆசிரியர் புலனாய்வு செய்து ஒரு செய்தி வெளியிட்டார். அ.தி.மு.க. மந்திரிகள் மற்றும் எம்.எல்.ஏ.க்களின்

சொத்துப் பட்டியல்ஆதாரங்களைஎல்லாம்திரட்டவேஇந்தகொள்ளைநாடகம்நடத்தப்பட்டது. இதைவைத்தே,ஓபிஎஸ். மற்றும் எம்.எல்.ஏ.க்களை தன் பிடிக்குள் வைத்திருந்தார் எடப்பாடி என்று குற்றம்சாட்டினார். அதை எடப்பாடி கண்டு கொள்ளவே இல்லை.

இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் கொடநாடு வழக்கு தூசி தட்டப்பட்டு உள்ளது. 5 ஆண்டுகள் கழித்து இப்போது சசிகலாவிடம் மேற்கு மண்டல ஐஜிசுதாகர் தலைமையிலான தனிப்படையினர் இரு நாட்களாக விசாரணை நடத்தினர். நீலகிரி எஸ்.பி. ஆசிஷ்ராகவ், விசாரணை அதிகாரியான கூடுதல்டிஎஸ்பி கிருஷ்ணமூர்த்தி, டிஎஸ்பி சந்திரசேகர்,இரு பெண் டிஎஸ்பிக்கள், குற்றப்பிரிவு எழுத்தர் மற்றும் ஒரு டைப்பிஸ்ட், ஒரு வீடியோ கிராபர் ஆகியோர் அடங்கிய குழுவினர் சென்னைதி.நகரில் உள்ள சசிகலா வீட்டில் இந்த விசாரணையை மேற்கொண்டனர்.

500 கேள்விகள்வரை சசிகலாவிடம் கேட்கப்பட்டன. அதற்கு சசிகலாவும்தன் நினைவில் இருந்தவை மற்றும் தெரிந்தவைகளுக்கு சளைக்காமல் பதில் அளித்துள்ளார். பல கேள்விகளுக்கு நினைவில் இல்லை என்றே அவர் கூறியதாக தெரிகிறது. முதல்நாள் 6மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. கொடநாடு பங்களாவில் எவ்வளவு பணம் இருந்தது, எவ்வளவு நகைகள் இருந்தன... சொத்து பத்திரங்கள் என்னென்ன என்பது தொடர்பான கேள்விகள் கேட்கப்பட்டதாக தெரிகிறது. பல்வேறு கோணங்களில் கேள்விகள் கேட்கப்பட்டு அவை வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டது. ஏற்கனவே வருமான வரித்துறையால் கண்டு பிடிக்கப்பட்டு முடக்கப்பட்ட சசிகலாவின்ரூ.1600 கோடி சொத்துக்கள் தொடர்பாகவும் கேள்விகள் கேட்டு பதிலை பதிவு செய்தனர்.

எஸ்டேட் மேலாளர் நடராஜன் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையிலும் சசிகலாவிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. மேலும் கொடநாடு எஸ்டேட்டுக்கு அழைத்துச் சென்று சசிகலாவிடம் விசாரணை நடத்தவும் போலீசார் முடிவு செய்துள்ளனர். எப்படியும் இந்த வழக்கில் எப்படியாவதுஎடப்பாடியை சிக்கவைக்கவேண்டும் என்பதே தி.மு.க. தரப்பின் நோக்கம். அவரை கைது செய்யாவிட்டாலும் அவரது பெயரை கெடுக்கும் நோக்கில் போலீசாரின் அடுத்த கட்டநடவடிக்கைகள் இருக்கலாம் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது. இதற்கு சசிகலாவும் பூரண ஒத்துழைப்பு அளிக்கிறார். அவருக்கு அதிமுக நம் கைக்குள் வரவேண்டும் என்பதே நோக்கமாக உள்ளது. எப்படியோ கொடநாடு பங்களா மர்மங்களின்முடிச்சுகள் அவிழ்ந்தால் சரி....

## கொடநாடு எஸ்டேட் ஒரு கோயில்!

**போலீசார் நடத்திய விசாரணை பற்றி அறிக்கை வெளியிட்டுள்ள சசிகலா, கொடநாடு பங்களாவை பொறுத்த வரை என் அக்கா மனநிறைவுடனும் அமைதியுடனும் இருந்த இடம். மற்றவர்களுக்கு அது ஒரு சாதாரண இடமாக இருக்கலாம்.எங்களைப் பொறுத்த மட்டில் அதை ஒரு கோயிலாகத் தான் பார்க்கிறோம். காவல்துறையினர் அளித்த கேள்விகளுக்கு உரிய பதில் அளித்துள்ளேன். விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தந்திருக்கிறேன். இந்த வழக்கில் அப்பாவிகள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். எனவே உரிய விசாரணை நடத்தி உண்மை குற்றவாளிகளை காவல்துறையினர் கண்டுபிடித்து தண்டிக்கப்படவேண்டும் என்று கூறிஉள்ளார். அதில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் வி.கே.சசிகலா என்று கையொப்பமிட்டுள்ளார். அ.தி.மு.க.வில் இருந்து சசிகலா நீக்கப்பட்டது சரியே என்று நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு பின்னரும் சசிகலா தன்னை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என்றே கூறி வருவது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.**



# ஆந்திரா பாணியில்

தமிழகத்தில் ஆளுகிற தி.மு.க.வின் மீது எந்த வித குற்றச்சாட்டும் வந்து விடக்கூடாது என்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியாக உள்ளார். அதனால் தான் மாற்றுக்கட்சியினர் குறை கூறினாலும் உடனடியாக விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிகிறார். தவறுகள் தென்பட்டால் அந்த ஒப்பந்தத்தையே ரத்து செய்கிற அளவுக்கு கண்ணியமான ஆட்சி நடத்துகிறார் என்று பாராட்டுக்கள் குவிகின்றன.

இதில்ஒன்றுதான்அமைச்சர்கண்ணப்பனின் இலாகா மாற்றம். இவர் அ.தி.மு.க.வில இருந்த போதே குற்றச்சாட்டுக்களில்சிக்கியவர் ஆயிற்றே... இவருக்கு அமைச்சர் பதவி வழங்கலாமா.. அதுவும் போக்குவரத்து போன்ற முக்கியமான துறையை ஒதுக்கலாமா என்ற சர்ச்சையும் எழுந்தது. அதே போலவே அவர் பதவி ஏற்றபின்னர் அவர் மீதுஎதிர்க்கட்சிகள் பல முறைகேடு குற்றச்சாட்டுக்களை முன் வைத்தன. இது வழக்கமான புகார்கள் என்ற போதிலும் அது பற்றி விசாரித்து உண்மை நிலை கண்டறியப்பட்டது.

**தி.மு.க.வில் தொடருது அதிரடிகள்!**

இந்தநிலையில் தான் அதிகாரி ஒருவரை சாதியைச் சொல்லி திட்டிய விவகாரத்தில் அமைச்சர் மீதே தப்பு என்று தெரிந்ததும் தண்டிக்கும் விதமாக அவரது இலாகா பறிக்கப்பட்டது. இதற்கு உடனடியாக முதல்வருக்கு சமூக வலைதளங்களில் பாராட்டுகள் குவிந்தன.

இத்துடன் நிற்கக்கூடாது... மேலும்பல அமைச்சர்களை களை எடுக்கவேண்டும்என்றும் முதல்வரின் தனி பிரிவுக்கு பல்வேறு புகார்கள் வந்துள்ளன. அவற்றின் மீதும் விசாரணை நடத்தப்படுவதாக கோட்டை வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன . தற்போது அந்தப்பட்டியலில் இன்னொரு தென்மாவட்ட அமைச்சர் ஒருவர் சிக்கி உள்ளார். மாற்றுக்கட்சியில் இருந்து வந்த அவர் மீது, சொந்த கட்சி யினரே குறை கூறுகின்றனர். அவரது உதவியாளர்கள் அடிக்கிற கொட்டங்களுக்கும் அளவில்லை. துறையின் மீது அமைச்சருக்கே அதிருப்தி இருப்பதால், துறை சார்ந்தபணிகளில் அவர் அக்கறை காட்டுவதே இல்லை என்று அதிகாரிகளும்



# அமைச்சர்கள் மாற்றம்

குற்றம்சாட்டுகின்றனர். எனவே அவர் மீது சட்டசபை கூட்டம் முடிந்த உடன் நடவடிக்கை உறுதி என்கிறார்கள்.

மேலும் சட்டசபை கூட்டத் தொடரில் கேள்வி நேரத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் அளிக்கும் பதிலையும் முதல்வர் உன்னிப்பாக கவனித்து வருகிறார். இந்தத் தொடர் அமைச்சர்களுக்கான டெஸ்ட் என்றே கூறலாம். இதில் யார் யார் தேறுகிறார்கள் என்பதை முதல்வர் கவனிப்பதால், இதற்காக அமைச்சர்கள் பலரும் பயிற்சி எடுத்து வருகிறார்கள். சில ஜுனியர் அமைச்சர்கள், பதில்களை சுருக்கமாக எழுதித் தரும்படி அதிகாரிகளிடம் கூறி உள்ளனராம். இதற்காக பத்திரிகையாளர்கள் சிலரையும் துணைக்கு வைத்துக்கொண்டே தன்னை தயார்படுத்திக்கொள்ளும் அமைச்சர்களும் உள்ளனர்.

சமீபத்தில் ஆந்திராவில் அமைச்சர்கள் கூண்டோடி விலகி, அமைச்சரவையை மாற்றி அமைக்க ஒத்துழைப்பு தந்தனர். இதன்மூலம் மாவட்டத்தில் ஒரு நபர் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளிவைக்கப்பட்டுள்ளது. எந்தஒரு நபருக்கும் தானே பெரியவர் என்ற ஆணவம் இருக்காது என்றே ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியினர் நம்புகிறார்கள். இதே போல தமிழகத்திலும் அமைச்சர்கள் மற்றும்கட்சி நிர்வாகிகளை மாற்றி அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை தி.மு.க.வின் மூத்த நிர்வாகிகள் வலியுறுத்தி உள்ளனர்.

உள்ளாட்சி தேர்தலில் உள்ளடிவேலை செய்தவர்கள் மற்றும் திறனற்ற, செயலற்ற அமைச்சர்களை மாற்றி விட்டு திறமையானவர்களை அமைச்சர் ஆக்க வேண்டும்.மா. செ. அல்லது அமைச்சர்... இரண்டில் ஒரு பதவி தான் ஒருவருக்கு இருக்கவேண்டும் என்ற கோரிக்கையும் தி.மு.க.வில் வலுத்துள்ளது. இவற்றின் மீது சட்டசபை கூட்டத் தொடர் முடிந்த பின்னர் முதல்வர் கவனம் செலுத்துவார் என்ற கருத்து அறிவாலய வட்டாரங்களில் எதிரொலிக்கிறது. எவரும் தன் மீது சுண்டு விரலைக்கூட நீட்டக்கூடாது என்பதில் முதல்வர் உறுதியாக உள்ளார். தனது அமைச்சரவை நவரத்தினங்கள் போல ஜொலிக்கவேண்டும் என்று நினைக்கிற முதல்வர் மு..க.ஸ்டாலின், அப்பழுக்கற்ற வகையில் அமைச்சரவையை மாற்றி அமைப்பார் என்று தி.மு.க.வினர் உறுதிப்படக்கூறுகிறார்கள். நம்பிக்கை தானே வாழ்க்கை... நடக்கிறதா என்று பார்ப்போம்.

# செங்கோட்டையனுக்கு ஏற்றமா?

அ.தி.மு.க.வில் சீனியர் செங்கோட்டையன். முன்னொரு காலத்தில் ஜெயலலிதாவின் முதல் அமைச்சரவையில் கொடி கட்டிப்பறந்தவர். அதன் பிறகு என்ன ஆனதோ, கட்சியில் அவர் இருந்தாலும் முக்கியத்துவம் இல்லை. அவருக்கு பின்னால் அரசியலுக்கு வந்த ஓ.பி.எஸ் போன்றவர்கள் முன்னுக்கு வந்துவிட்டனர். அவரால்வளர்த்து விடப்பட்ட எடப்பாடியின் பின்னால் கைகட்டி சேவகம் பார்க்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். எடப்பாடி அமைச்சரவையில் கல்வித்துறை மந்திரியாக இருந்தாலும், மட்டம் தட்டியே வைக்கப்பட்டிருந்தார். ஆனால் தொகுதியில் செல்வாக்கு மிக்க செங்கோட்டையன் தொடர்ந்து 9முறை கோபியில் வெற்றி பெற்று வருகிறார்.தன் தொகுதியை தக்கவைத்துக்கொள்ள அரும்பாடுபட்டு வருகிறார்.



இப்போது கட்சியே, இ.பி.எஸ்., ஸ்வ ஓ.பி.எஸ். என்று இரட்டைத் தலைமையை குறிவைத்தே நடத்தப்படும் நிலையில் செங்கோட்டையனின் முக்கியத்துவத்துக்கு வேலையே இல்லை. தான் புறக்கணிக்கப்படுகிறோம் என்ற நிலையில் தான் தனது அரசியல் பயணம் பற்றி சிந்திக்கத் துவங்கி விட்டார். தன்னை வளர்த்து ஆளாக்கிய இயக்கத்திலேயே தொடர்ந்து இருப்பதா... அல்லது சின்னம்மா பின்னால் போவதா... அல்லது பேசாமல் தாய்க்கழகத்தில் சங்கமம் ஆகி முத்துசாமி பாணியில் கொங்கு மண்டலத்தில் தி.மு.க.வுக்கு தோள் கொடுத்து முக்கியத்துவம் பெறுவதா என்ற யோசனையில் ஆழ்ந்து விட்டார். சசிகலா பின்னால் செல்வது என்பது ஒரு குறிப்பிட்ட சாதியினரின் ஆதிக்கத்தில் உள்ள கட்சியில்சேருவதாகி விடும். தமிழ்நாட்டில் சாதிய ரீதியான கட்சிகள் செல்வாக்கு பெற்றதாக வரலாறே இல்லை. சாதிய கட்சி என்றாகிவிட்டால் பிற சாதி மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டி வரும். வடமாவட்டங்களில் கணிசமாக உள்ள வன்னியர்களுக்கான பா.ம.க. தனித்தே நின்றால் ஒற்றை இலக்கில் கூட ஜெயிக்க முடியவில்லை. ஏதாவது ஒருதிராவிட கட்சியில் அணி சேர்ந்தால் தான் ஒரு சில தொகுதிகளை அல்லது சில சமயங்களில் இரட்டை இலக்கை அடைய முடிகிறது. எனவே சசிகலா தலைமை ஏற்று சேர்ந்தாலும் பெரிய அளவில் வெற்றியை பெற முடியாது என்ற சிந்தனையில் ஆழ்ந்து விட்டார் செங்கோட்டையன். கொங்கு மண்டலத்தில் தி.மு.க. பலவீனமாக உள்ள நிலையில், சமீபத்திய நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கணிசமான இடங்களை தி.மு.க. கைப்பற்றி உள்ளது. வரப் போகிற நாடாளுமன்றத் தேர்தலில் இதே வெற்றியை தக்க வைக்கவேண்டும் என்று தி.மு.க. தலைமை கணக்கு போடுகிறது. இதற்காகவே அ.தி.மு.க.வை பிளவுபடுத்தும் வேலைகளும் இன்னொரு புறம் நடக்கிறது.

இந்த தருணத்தில் தான் தி.மு.க.வுடன் கைகோர்க்கலாமா என்று கணக்கு போட்டு வருகிறார் செங்கோட்டையன். அப்படி சேரும் பட்சத்தில் தனக்காக மதிப்பு, மரியாதையுடன் அங்கீகாரத்தையும் அவர் எதிர்பார்க்கிறார். அதனால்தான் சமீப காலமாக தி.மு.க. ஆதரவுப் போக்கை அவர் கையில் எடுத்துள்ளார். பள்ளிக்கல்வித்துறை மானிய கோரிக்கையில் பேசிய செங்கோட்டையன், இரு மொழிக்கொள்கை, நீட் தேர்வு போன்ற விஷயங்களில் அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு அ.தி.மு.க.துணை நிற்கும் என்று

கூறி பரபரப்பை உண்டாக்கினார்.

ஆனால் தி.மு.க.வில் உள்ள முக்கிய புள்ளிகள், இதை விரும்பவில்லை. அ.தி.மு.க.வில் இருந்து வருகிறவர்களுக்குத்தான் பதவி மரியாதை என்பது தி.மு.க.வில் எழுதப்படாத சட்டமாகி விட்டது. அப்படி செங்கோட்டையன் கட்சி மாறி வரும் போது, அவருக்கே மரியாதை அளிக்கப்படும், நாம் ஓரம் கட்டப்படுவோம் என்று பரம்பரை தி.மு.க.வினர் கணக்கு போடுகிறார்கள். அதனால்தான் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் தி.மு.க.தலைமையோ, மாவட்ட தலைமையை புறக்கணித்தே அ.தி.மு.க. புள்ளிகளை இணைத்து வருகிறது. அதுவும் கொங்கு மண்டலத்தில் எடப்பாடிக்கு இணையான தலைமையான செங்கோட்டையன் வந்தால் ஆரத்தி எடுத்து வரவேற்பார்கள் என்பது மட்டும் திண்ணம். இதை அறிந்து தான் தற்போது செங்கோட்டையனை சரிக்கட்டும் வேலையில் அ.தி.மு.க. தலைமை இறங்கி யது. முதல் கட்டமாக ஈரோடு மாவட்டத்தில் நடந்த உள்கட்சி தேர்தலில் அவருக்கு மாவட்டச் செயலாளர் பொறுப்பு அளிக்கப்பட்டு உள்ளது. இதனால் அவர் சற்றே ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு என்ன தான் நடக்கிறது, பார்ப்போம் என சாந்தம் அடைந்திருப்பதாக கூறுகிறார்கள். மாநில அளவில் பொறுப்பில் இருந்து விட்டு மாவட்ட அளவில் பதவி அளித்து ஓரம் கட்டுகிறார்களோ என்ற எண்ணமும் செங்கோட்டையனுக்கு உள்ளது.

இதே போலத் தான் முன்னாள் அமைச்சர்கள் அனைவருமே மாவட்டச் செயலாளர்களாக பணியமர்த்தப்பட்டு உள்ளனர். கட்சியை பலப்படுத்தும் முயற்சி என்றாலும், எடப்பாடி என்ற ஒற்றைத் தலைமையை குறி வைத்தே இந்த ஏற்பாடுகள் நடப்பதாகவும் கூறப்படுகிறது.

# கோடைக்கால பகல் தூக்கம் ஆரோக்கியமானதா?

'பகலில் தூங்கினால் உடல் எடை அதிகரித்துவிடும்' என்பது பலரின் கருத்தாக இருக்கிறது. ஆனால் அது தவறு. வயிறு நிறைய உணவு சாப்பிட்டுவிட்டு, நீண்ட நேரம் தூங்கினால்தான் ஆபத்து. வீட்டில் ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு, பகல் நேர தூக்கம் தவிர்க்க முடியாதது. இன்று பெரும்பாலான இல்லத்தரசிகள் பகல் நேர தூக்கத்தை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இல்லத்தரசிகள் மட்டுமல்லாமல், பணியாற்றுபவர்கள் கூட, விடுமுறை நேரத்தில் பகல் நேர தூக்கத்தை கடைப்பிடிப்பது உண்டு.

நாம் இரவில் 6 முதல் 8 மணி நேரம் வரை தூங்குவோம். குளிர் காலத்தில் பகலில் தூங்குவதற்கும், கோடைக்காலத்தில் பகல் நேரத்தில் தூங்குவதற்கும் வேறுபாடு உண்டு. கோடைக்காலத்தில் பகல் நேரம் அதிகமாக இருக்கும் மற்றும் வெப்பம் அதிகமாக இருப்பதால் உடலில் நீர்ச்சத்து குறையும். இதனால் மூளை சோர்வடையும்.காலை முதல் மதியம் வரை மூளை மற்றும் உடலிற்கு அதிக வேலை கொடுக்கும்போது, சற்று ஆசுவாசப்படுத்திக்கொள்ள மூளையோ, உடலோ தானாகவே ஓய்வு கேட்கும். அந்த நேரத்தில் 15 நிமிடம் தூங்கினால் உடல் உறுப்புகள் சுறுசுறுப்பாகிவிடும்.

ஒரு சிலர் உடல் உழைப்பு இல்லாமல், மூளைக்கு அதிக வேலை கொடுக்கக்கூடிய வகையிலான பணிகளில் ஈடுபட்டிருப்பார்கள். இத்தகையவர்களுக்கு அதிக சோர்வின் காரணமாக, சில சமயங்களில் மூளை உறக்க நிலைக்குக் கொண்டு செல்லும். இவ்வாறு தானாகவே உறக்கம் வரும் நேரத்தில், பத்து நிமிடம் ஓய்வு எடுத்துக் கொள்வதில் தவறில்லை. இதனால் உடல் எடை அதிகரிக்காது. பகலில் சிறிது நேரம் தூங்குவதால் மூளை செயல்பாடு அதிகரித்து அறிவுத்திறன் வளரும். பகலில் தூங்குவது இதயத்திற்கு நல்லது. ரத்த அழுத்தம் குறையும். நினைவாற்றலை அதிகரிக்கவும், செயல்திறனை மேம்படுத்தவும், மனநிலையை சீராக வைக்கவும் உதவும்.

கோடைக்காலத்திலும், உடல் உழைப்பே இல்லாமல் பகல் பொழுதில் தூங்கினால், நோய்களுக்கான களமாக உடல் மாறி விடும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தேவையான அளவு உழைப்பை உடல் மேற்கொண்டு விட்டது எனும் பட்சத்தில், சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். இதனால் எந்த பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. அதற்காக வெகுநேரம் தூங்க வேண்டாம். மதிய வேளையில் 15 நிமிடங்களில் இருந்து 30 நிமிடம் வரை மட்டுமே தூங்குவது நல்லது. அதற்கு மேலே தூங்கினால், ஒரு கட்டத்தில் மதிய தூக்கத்திற்கு உடல் அடிமையாகி விடும்.

# இளையராஜாவுக்கு என்ன ஆச்சு... சங்கடமா... சன்மானமா...?

தமிழக அரசியலில் தற்போது சர்ச்சையாக கிளம்பி இருப்பது பிரதமர் மோடியை இசை அமைப்பாளர் இளையராஜா பாராட்டியது தான். அரசியல் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கருடன் பிரதமர் மோடியை ஒப்பிட்டு கருத்து கூறியிருந்தார் இளையராஜா. அதாவது ஒரு புத்தகத்துக்கு முன்னுரை எழுதிய இளையராஜா," தற்போது நாடு வளர்ச்சிப்பாதையில் செல்கிறது. அனைத்து துறைகளிலும் முன்னேறுகிறது. சமூகநீதிக்காகவும் பிரதமர் மோடி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளார். முஸ்லிம் பெண்களின் வாழ்வில் மாற்றத்தை கொண்டு வந்த முத்தலாக் தடை போன்றபல சமூக பாதுகாப்புத் திட்டங்களை பார்த்து அண்ணல் அம்பேத்கரே பெருமை அடைவார். இந்தியாவைப் பற்றி பெரிய கனவு கண்டவர்கள் அம்பேத்கரும்,மோடியும் நிகரானவர்கள்" என்றுகூறி யிருந்தார்.

இதற்காக இளையராஜாவுக்கு எதிரான விமர்சனங்கள் கிளம்பின. இசைக்கலைஞர்கள் பொதுவானவர்கள். இப்படி ஒரு கட்சியின் தலைவரை புகழ்ந்து தனது ஒரு சார்பு நிலைப்பாட்டை வெளிக்காட்டலாமா... என்று கேள்விகள் கிளம்பின. அந்த வார்த்தைகளை திரும்பப்பெற வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் இளையராஜா அதை மறுத்து விட்டதாக அவரது தம்பியும், பா.ஜ. பிரமுகருமான கங்கை அமரன் கூறி உள்ளார்.



பிரதமரை புகழ்ந்தது எனது சொந்த கருத்து. என் எண்ணத்தை பிரதிபலித்தேன் எனக்கும் கருத்து சுதந்திரம் உண்டு. இதை விமர்சிக்கவும் மற்றவர்களுக்கு உரிமை உண்டு. அப்படி விமர்சித்தால் ஏற்றுக்கொள்வேன். ஏதோ பதவிக்காக அவரை நான் பாராட்டவில்லை. பிரதமர் மோடியையோ, அம்பேத்கரையோ நான் விமர்சிக்கவில்லையே. பாராட்டத்தான் செய்திருக்கிறேன். என்னை திட்டுவதால் என் கருத்தை திரும்பப்பெற மாட்டேன். ஒரு கட்சிக்கு ஆதரவாக ஓட்டுபோடும்படி நான் கூறவில்லை. ஓட்டுபோடாதீர்கள்

என்றும் கூற மாட்டேன். ஒரு படத்துக்கு நான்போட்ட டியூனை திரும்பப்பெற மாட்டேன். அதே போலத்தான் பிரதமரை பாராட்டியதையும் திரும்பப் பெற வேண்டிய அவசியம் இல்லை என்று இளையராஜா கூறியதாக கங்கை அமரன் விளக்கம் அளித்துள்ளார்.

உடனே இளைய ராஜாவுக்கு ஆதரவாக பா.ஜ.தலைவர் ஜே.பி.நட்டா கருத்து தெரி வித்துள்ளார். தமிழகத்தில் ஆளுகிற கட்சியை பாராட்டவில்லை என்பதற்காக இளையராஜாவை குறி வைத்துள்ளனர். இளையராஜா ஒரு இசை மேதை. அவரை அவமதிப்பது சரியானது அல்ல. ஒவ்வொருவருக்கும் கருத்து கூற சுதந்திரம் உண்டு. ஒவ்வொருவர் பார்வையும் தங்களுக்கு சாதகமாகவே இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவது சரியான ஜனநாயகம் அல்ல. தேர்தல்தோல்விகளால்எதிர்மறை அரசியலில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளன என்று நட்டா கூறினார். தமிழக பா.ஜ.வும் ஒரு வீடியோ வெளியிட்டது. தமிழகத்தில் உண்மையைப் பேசத் தயக்கம் உள்ளது. ஆனால் தன் மனதில் பட்ட உண்மையை அப்படி பேசி விட்டார் இளையராஜா என்று பா.ஜ. விளக்கமும் அளித்துள்ளது.

இளையராஜாவுக்கு ஏற்கனவே கடந்த2018ம் ஆண்டே பத்மவிபூஷன் விருது வழங்கிமத்திய அரசு கவுரவித்தது. இது தமிகழகத்துக்கும், தமிழக மக்களுக்கும் கிடைத்த கவுரவம் என்று இளையராஜா கருத்து கூறியிருந்தார். இப்போது இப்படி ஒரு பாராட்டை வழங்கி இருப்பது பதவிக்காகத்தான் என்ற விமர்சனங்களும் கிளம்பி உள்ளன. மாநிலங்களவையில் 12 பேரை ஜனாதிபதி நியமிக்க முடியும். இதில் பாதிபேரின் பதவிக்காலம் முடிந்துவிட்டது. கலை உள்ளிட்ட பல துறைகளில் மேதைகளாக விளங்குபவர்களை எம்.பி. ஆக்குவது உண்டு. இந்த நியமன எம்.பி. பதவியில் மறைந்த நடிகர்கள் சிவாஜி, சோ போன்றவர்கள் இருந்தனர். இந்த முறை ஒரு பதவி, தமிழகத்துக்கு வழங்கப்படும் என்றும், அதை இளையராஜாவுக்கு வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்றும் டில்லி வட்டாரங்கள் கூறுகின்றன. மேலும் இசை உலகில்சாதித்த இளையராஜாவை கவுரவிக்கும் வகையில் அவருக்காக பா.ஜ.வே தனிப்பெரும்பாராட்டு விழாவை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் தெரிகிறது. இது தொடர்பாக இளையராஜாவை தம்பி கங்கை அமரன் சந்தித்துப் பேசி இருக்கிறார். இப்படி இளையராஜாவை கவுரவிப்பதன்மூலம் பட்டியலின மக்களை தங்கள் பக்கம் இழுக்கவே பா.ஜ., ஏற்பாடுகள் செய்வதாகவும் அரசியல் வட்டாரத்தில் பேச்சு நிலவுகிறது. இளையராஜா ஒன்றும் மறைமுக அரசியல்வாதி அல்ல. அரசியல்கட்சிக்காக பேசுவதற்காக இளையராஜா ஒன்றும் அறக்கட்டளை நடத்தவில்லை என்று

## நான் கருப்பு திராவிடன்.. யுவன் சங்கர் ராஜா ட்விட்



இசை அமைப்பாளர் இளையராஜாவின் கருத்து தான் சர்ச்சை ஆனது என்றால், அவரது மகன் யுவன் சங்கர் ராஜாவும் ஒரு சர்ச்சையை கிளப்பிவிட்டார். நான் ஒரு கருப்பு திராவிடன், தமிழன் என்பதில் பெருமை கொள்கிறேன் என்று சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார் யுவன். அத்துடன் கருப்பு லுங்கியுடன் காணப்படும்படத்தையும் பதிவேற்றம் செய்திருக்கிறார்.

திராவிடர்களின் நிறமே கருப்பு தான் என்று பெருமைப்படும் நிலையில், தன்னை திராவிடனாக யுவன் அடையாளம் காட்டியிருப்பதற்கும் வரவேற்புகளும் விமர்சனங்களும் சமூக வலைதளங்களில் குவிந்து வருகிறது. இளையராஜா மகன் யுவன் சங்கர் ராஜா இஸ்லாமில் ஐக்கியமாகி தனது பெயரையும் அப்துல்காலிக் என்றே மாற்றிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

பா.ஜ.வைச் சேர்ந்த நடிகை காயத்ரி ரகுராம் சாடி உள்ளார். இசை அமைப்பாளராக உள்ள ஏ.ஆர்.ரகுமான் இந்தி திணிப்புக்கு எதிராக சொன்ன கருத்து பா.ஜ.வை சீண்டிவிட்டுள்ளது. இதற்காகவே இன்னொருஇசை அமைப்பாளர் இளையராஜாவை தன் பக்கம் இழுக்கவே தம்பி மூலமாக இந்த வலை விரிப்பு படலம் நடந்ததாகவும் கூறப்படுகிறது. அதே சமயத்தில் இளையராஜா சேவை வரி கட்டவில்லை என்பதால் சேவை வரி சட்டத்தின் கீழ் விளக்கம் தரவேண்டும் என்று கூறி மத்திய அரசின் ஜிஎஸ்டி புலனாய்வுத்துறை கடந்த பிப்ரவரி28 மற்றும் மார்ச் 1ம் தேதி என இரு முறை சம்மன் அனுப்பி உள்ளது என்றும் வருமானவரித்துறையின் சிக்கல்களும் அவருக்கு இருப்பதாகவும் கூறப்படுகிறது.இதை வைத்தே இளையராஜாவை பா.ஜ. கொக்கி போட்டு இழுத்துள்ளது என்று தெரிகிறது. இன்கம்டாக்ஸ் பிரச்னை தொடர்பாகவே இளையராஜா இப்படி கருத்து கூறியிருக்கலாம் என்று பட அதிபர் கே. ராஜன் பகிரங்கமாகவே கூறி இருக்கிறார்.

இப்போது இந்த சர்ச்சையில் தி.மு.க.வை பாஜ. இழுத்துள்ளது. இதன்மூலம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை திசை திருப்பும் வகையில் சதி நடப்பதாகவும், இளையராஜாவுக்கு எதிராக திமுகவினர் யாரும் கருத்து கூறவில்லை என்றும் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்எஸ் பாரதி விளக்கம் அளித்துள்ளார். இளையராஜாவுக்கு இசைஞானி என்ற பட்டத்தை வழங்கியதே மறைந்த திமுக தலைவர் கருணாநிதி தான் என்றும் திமுக வினர் கூறுகிறார்கள்.

ஆனால் எம்.பி. பதவிக்காக இளையராஜா ஆசைப்படவே இல்லை. அவர் இசைத்துறையில் மகாசாதனைகளை செய்தவர். பிரதமரின் நற்செயல்களை பாராட்டியதைசர்ச்சை ஆக்க வேண்டாம். இதற்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை என்று இளையராஜா தரப்பில் விளக்கம் தரப்படுகிறது. தமிழ்நாட்டுக்காரர் ஒருவர்நியமன எம்.பி. ஆவது நமக்கும் பெருமை தானே....

# மோடியும் திராவிடரே!



தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியை திராவிடன் மாடல் ஆட்சி என்றே முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறி வருகிறார். தமிழகத்தின் திராவிட மாடல் ஆட்சி இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது. இனி மேல் சமபந்தி போஜனம் என்பது சமத்துவ விருந்தாக வழங்கப்படும் என்றும் ஸ்டாலின் கூறியிருந்தார்.

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா போன்ற 4 மாநிலங்களில் பிறந்தோரையே திராவிடர்கள் என்று கூறி வந்தநிலையில், குஜராத் கூட திராவிட தேசம்தான் என்கிறார் பா.ஜ.வின் எச். ராஜா. பிரதமர் மோடியை திராவிடர் தான். எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, அண்ணாமலை அனைவருமே திராவிடர்கள் தான். திராவிடர்கள் தான் தமிழ்நாட்டை ஆள்வார்கள். எல்லோர் மனதிலும் ஒரு மனமாற்றம் வரும். இளையராஜா போன்ற ஒரு பிரபலமான நபருக்கு மனமாற்றம் வந்துள்ளது. இதனால் பெரிய அளவில் தாக்கம் ஏற்படும் என்பதால் தான் இளையராஜா கருத்தைவிமர்சிக்கிறார்கள் என்கிறார் எச்.ராஜா.

பிரதமர்மோடியை திராவிடர் என்று சொன்னதன் மூலம், இந்தியாவிலேயே நடப்பது திராவிடர் ஆட்சி தான் என்று பா.ஜ. முன்னணி தலைவரே ஒத்துக்கொண்டது மகிழ்ச்சி என்கிறது தி.மு.க. தரப்பு.

# ஆண்டவன் சொன்னால் அண்ணாமலை முடிப்பார்!



## 10 எம்.பி. சீட் குறிவைக்கிறது பா.ஜ.

தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. இருந்தாலும், பா.ஜ.தலைவர் அண்ணாமலையோ தானே எதிர்க்கட்சித்தலைவர் என்ற முறையில் செயல்படுகிறார். தி.மு.க. ஆட்சி மீதான கணைகளை ஏவிக்கொண்டே இருக்கிறார். தினமும் குற்றச்சாட்டுக்களும், விமர்சனங்களும் தொடர்கின்றன. என் மீது வழக்கு போடுங்கள். கைதாகத்தயார் என்று சவால்விடுகிறார். ஆனால் சமீபத்தில் நடந்த உள்ளாட்சி தேர்தலில் 59 சதவீத இடங்களுக்கு ஆட்களையே நியமிக்க வில்லை. காரணம், வேட்பாளர்களே இல்லை. மீதி இடங்களில் வார்டு மாறி ஆட்களை நிறுத்தி உள்ளனர். இதனால் தான் மோசமான தோல்வியை பா.ஜ. சந்தித்தது. இதற்கு காரணம் மாவட்ட தலைவர்கள் என்று கூறி அவர்களை நீக்கி விட்டார் அண்ணாமலை. இவர்தலைவராக நீடித்தால் பா.ஜ.வையே காலிசெய்துவிடுவார் என்று பதவி இழந்த தலைவர்கள் கூறுகின்றனர்.

இந்தநிலையில் அடுத்த மக்களவைத் தேர்தலுக்கு தயாராகி விட்டார் அண்ணாமலை. உள்ளாட்சியில் தனித்து போட்டியிட்டது போல மக்களவைத் தேர்தலில் தனித்துநின்றால் நிச்சயம் ஒரு இடம் கூட ஜெயிக்க முடியாது என்பதே நிதர்சனமான உண்மை. அதனால் தான் உஷாராக உள்ளாட்சியில்மட்டுமே தனித்துநிற்கிறோம் என்று அண்ணாமலை முன்பே அறிவித்தார். இப்போதோ மொத்தம் உள்ள புதுவை உள்ளிட்ட தமிழகத் தொகுதிகள் நாற்பதில்25 இடங்களில் பா.ஜ. போட்டியிடும் என்று அறிவித்தும் இருக்கிறார். இது தொடர்பாக அவர் 2024ல் நடக்கும் நாடாளுமன்றத் தேர்தலில்தமிழ்நாட்டில் இருந்து 25 பா.ஜ. எம்.பி.க்கள் வெற்றிபெற வேண்டும். அது நடந்து விட்டால் அதில்5 பேர் மத்திய அமைச்சர் ஆகி விடுவார்கள். அவர்களால் தமிழ்நாட்டுக்கு 50ஆயிரம் கோடிரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை செயல்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தற்போது அசுரர்களுக்குஎதிராக களை எடுப்பு யுத்தம் தொடங்கிவிட்டது. தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் அசுரர்கள் ஆட்சி களை எடுக்கப்படும். அதிவிரைவில் ஆட்சி அகற்றப்படும். அதற்காக நாம் தயாராக வேண்டும். அப்போது ஆண்டவன் கட்டளையிடுவான். அதை நாம் முடித்துக் காட்ட வேண்டும். விரைவில் தமிழகத்திலும் கேரளாவிலும் பா.ஜ. ஆட்சி அமையும் என்று தொண்டர்களை குஷிப்படுத்தும் வகையில் அவர் பேசினார்.

இதை வைத்துப் பார்க்கும் போது மொத்தம் உள்ள 40 தொகுதிகளில்25 தொகுதிகளை பா.ஜ. குறி வைத்துள்ளது உறுதியாகி விட்டது. இதை ஏற்காத பட்சத்தில் உள்ளாட்சி தேர்தல் போல பா.ஜ.தனித்தே நிற்கவேண்டி வரும். அ.தி.மு.க. தயவின்றி ஜெயிக்க முடியாது என்பதால் ஆளுக்கு பாதி என்று20:20 என்ற கணக்கில் பா.ஜ. இறங்கி வரும் என்றே தெரிகிறது, பாதிக்கு பாதியை முன்பு காங்கிரசுக்கு அ,தி,மு,க,விட்டுக்கொடுத்தது போல இப்போது பா,ஜ,வுக்கு விட்டுக்கொடுக்குமா என்பது தெரியவில்லை, 20க்கு ஆசைப்பட்டு பத்து சீட் பா,ஜ,வுக்கு கிடைக்குமா

# மகாத்மா காந்தி போல மோடி!

## பா.ஜ.,தாசர் ஆனார் பாரிவேந்தர்!



பெரம்பலூர் மக்களவைத் தொகுதி தனித்தொகுதியாக இருந்தவரை பல முறை வென்றவர் தி.மு.க.வின் முன்னாள் மத்தியஅமைச்சர் ஆ.ராசா. அது பொதுத் தொகுதி ஆனதும் நீலகிரி பக்கம் போய் விட்டார் ராசா. இப்போது பெரம்பலூர் தொகுதியின் எம்.பி.யாகி விட்டார் பாரிவேந்தர் என்ற பச்சமுத்து. இவர் தொழில்அதிபர். கல்வியாளர். தொலைக்காட்சி நிறுவனங்கள் நடத்தி வருகிறார். இந்திய ஜனநாயக கட்சி என்ற பெயரில் தனிக்கட்சி நடத்தி வருகிறார். பார்கவுல சமூகத்தின் பெயரில் ஒரு சங்கமும் நடத்தி அதன்தலைவராக உள்ளார். கடந்த தேர்தலில் தி.மு.க.வின் கூட்டணி கட்சியாகி எம்.பி.யாகி விட்டார். மக்களவையில் இவர் தி.மு.க. எம்.பி.யாகத்தான் இருக்கிறார்.

இவர் தொலைக்காட்சி நடத்தினாலும்,பா.ஜ. ஆதரவு நிலைப்பாட்டைத் தான் சமீப காலமாக எடுத்து வருகிறார். தமிழக அரசை விமர்சித்து அவரது தொலைக்காட்சிகள் செய்திவெளியிடுவது தி.மு.க.வுக்கு அதிருப்தி. இந்தநிலையில்தான் இப்போது பா.ஜ.வின் தாசராகவே வெளிப்படையாக மாறி விட்டார் பாரிவேந்தர். தி.மு.க.வில் கொள்ளை நடப்பதாக பகிரங்கமாக குற்றம்சாட்டினார். இது தொடர்பாக திருச்சியில் அவர் அளித்த பேட்டியில், யார் ஆட்சிக்கு வந்தாலும் கொள்ளை அடிப்பது நிற்கவில்லை. ஏன் தான் அரசியலக்கு வந்தேனோ என்று வருத்தப்படுகிறேன். தி.மு.க.வுடன் எனக்கு நட்பும் இல்லை. விரோதமும் இல்லை. இனி வரும் தேர்தலில் எநர கட்சியுடனும் இந்திய ஜனநாயக கட்சி கூட்டணி வைக்காது. இவர்களோடு கூட்டணி வைத்தால் அவர்கள் கோபப்படுகிறார்கள். அவர்கள் பக்கம்போனால் இவர்கள் கோபப்படுகிறார்கள் என்று மனம் நொந்தார்.

அத்தோடு விடவில்லை. பிரதமர்மோடியை மகாத்மா காந்திக்கு ஒப்பிட்டார். மகாத்மா காந்தி போல நம் பிரதமர்மோடி. நாட்டின் முன்னேற்றத்துக்காக அல்லும் பகலும் உழைத்துக் கொண்டே இருக்கிறார். அவருக்கு எதிராக தமிழகத்தில் தவறான எண்ணம் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டு வருகிறது. விரைவில் இதை தமிழக மக்கள்புரிந்து கொள்வார்கள். இந்தியாவின் பெருமையை பாதுகாக்க நாட்டுக்காக உழைத்து வருகிற ஒரு பெருமகன் மோடி. பிரதமர்மோடியை புரிந்து கொண்டு தமிழக மக்கள் பாராட்டும் காலம் வெகு தொலைவில் இல்லை என்று பாரிவேந்தர் புகழாரம் சூட்டினார்.நீட் தேர்வு கடினம்தான் என்றாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். சேதயிக் கல்விக் கொள்கை சரியானது. மாநில கல்விக்கொள்கை தேவையற்றது என்றும் தி.மு.க.மீது பாய்ந்திருக்கிறார்.

ஏற்கனவே பா.ஜ. பக்கம் இருந்து பின்னர் தி.மு.க. பக்கம் தாவியவர் பாரிவேந்தர். இப்போது தி.மு.க. கூட்டணியை முறிப்பதற்காக அச்சாரம் போட்டுவிட்டார். தொடர்ந்து தி.மு.க. பக்கம் இருந்தால் ரெய்டுகளை யார்சமாளிப்பது... புத்திசாலி வேந்தர்தான்...

# பல்டி பாக்கியராஜ்!

தமிழ்த் திரைத் துறையில் முன்னணி இயக்குநராக ஒருகாலத்தில் இருந்தவர்பாக்கியராஜ். தற்போது கால மாற்றத்தின் காரணமாக ஒரு சில படங்களில் மட்டுமே நடித்து வருகிறார். பட்டிமன்றங்களுக்கும் நடுவராக இருக்கிறார். அவரது மனைவி பூர்ணிமாவும் சினிமா மற்றும் சின்னத்திரையில் நடிக்கிறார். அவர்களது மகன் சாந்தனுவும் சினிமாவில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் இப்போது மோடிக்கு புகழாரம் சூட்டி சர்ச்சையில் மாட்டிக்கொண்டு மன்னிப்பு கேட்டுள்ளார் பாக்கியராஜ். அவர் என்ன தான் பேசினார்....?

சென்னை பா.ஜ. அலுவலகமாக கமலாலயத்தில் ஒரு நூல் வெளியீட்டு விழா நடந்தது. அங்கே போனால் அவர்களுக்கு சாதகமாகத்தானே பேச வேண்டும். அப்படியே பாக்கியராஜ் பேசினார். பிரதமர்மோடியை குறை சொல்பவர்களை எனக்கு ரொம்ப பிடிக்கும். அவர் அடிக்கடிவெளிநாடு செல்வாக குறை சொல்கிறார்கள். அந்த விமர்சனங்களுக்கு பிரதமர் மோடி செவி சாய்க்காமல் இருக்கிறார். இந்தியாவுக்கு இப்படி எனர்ஜியான பிரதமர் தான் தேதவை. இக்கட்டான சூழல் வரும் போதுசமாளிப்பதுரொம்ப கஷ்டம்.மோடியை விமர்சிப்பவர்கள் , குறை பிரசவத்தில் பிறந்தவர்கள். இப்படிப்பட்டவர்கள்நல்லவற்றை பேச மாட்டார்கள். பிறர் சொல்வதையும் கேட்க மாடடார்கள். குறை பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்குத் தான் வாய், காது இருக்காது என்பதற்காக சொல்கிறேன் என்றார். பாக்கியராஜின் இந்த பேச்சு மாற்றுத் திறனாளிகளை கேலி செய்வதாக உள்ளது என்ற சர்ச்சை கிளம்பியது.

மனவளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வலி... அவர்களின்பெற்றோர்களுக்குத் தான் தெரியும். அரசியல்எதிரிகளை விமர்சிப்பவர்கள், குறை பிரசவத்தில் பிறந்தவர்கள் என்று சொல்வது ஊனமுற்றோரின் இயலாமையை கைக்கொண்டு அதை குறைத்துப் பேசி அரசியல் ஆதாயம் காணும் முயற்சியே. அரசியல்எதிரிகளை விமர்சிக்க ஏன் ஊனத்தை கையில் எடுக்கிறீர்கள்... எங்களுக்கும் மான உணர்ச்ச உண்டு. தொடர்ந்து எங்களை அரசியல்வாதிகள் புண்படுத்துவது ஏன் என்று கேள்விகள் கிளம்பின. சமூக வலைதளங்களில் டிரெண்டிங் ஆனது.

இதையடுத்து பாக்கியராஜ் பல்டி அடித்து மன்னிப்பு கேட்டுள்ளார். சென்னை நிகழ்ச்சியில் நான்பேசிய போது குறை பிரசவத்தில்பிறந்தவர்கள் என்று கூறியது தவறாக புரிந்து கொள்ளப்பட்டது அதிர்ச்சி அளிக்கிறது. குறைப் பிரசவம் என்ற வார்த்தை மாற்றுத்திறனாளிகளை குறிப்பிடவில்லை. கிராமத்தில் ஒரு மாதம்..இரு மாதம் முன்பே பிறக்கும் குழந்தைகளை குறை பிரசவம் என்பார்கள். ஆனால் குறை இருக்காது. நான் பேசியது யார் மனதையாவது புண்படுத்தி இருந்தால் மன்னிப்பு கேட்கிறேன். மாற்றுத்திறனாளிகளை நான் அக்கறையுடனே பார்க்கிறேன். நான் பா.ஜ. இல்லை. திராவிடத் தலைவர்களை பார்த்து வளர்ந்தவன். தமிழகத்தில் பிறந்து தமிழில் படித்து தமிழ் சினிமா என்றுதான் வளர்ந்து வந்துள்ளேன். சினிமாவில் திராவிட இயக்கங்களின் கருத்துக்கள் இருக்கும். இனியும் அது தொடரும் என்று பாக்கியராஜ் விளக்கம் அளித்துள்ளார்.



# தடுப்பூசி கட்டாயம் அல்ல!

# யாரையும் நிர்ப்பந்திக்காதீர்

**சுப்ரீம் கோர்ட் அதிரடி**

கொரோனா என்ற கொடிய நோய் வந்தாலும் வந்தது... உலகையே ஆட்டிப்படைத்து வருகிறது. ஒன்று, இரண்டு, மூன்று.. என தாக்குதல்கள் படையெடுத்துக்கொண்டே இருக்கின்றன. உலகளாவிய அளவில் இது வரை 51.4 கோடி பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.62.4 லட்சம் பேரை பலிகொண்டு உள்ளது. இந்தியாவில் இது வரை 5.24லட்சம் பேர் இறந்துள்ளனர். தற்போது தினமும் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3000க்கும் கீழ் குறைந்துள்ளது. கொரோனாவின் பிடியில் இருந்து 4.25 கோடி பேர் மீண்டுள்ளனர். இது வரை 189.41 கோடி தடுப்பூசி டோஸ்கள் போடப்பட்டுள்ளன.

கொரோனாவின் தாக்கம் தற்போது மெல்ல மெல்ல உயர்ந்து வருகிறது. அதனால் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் என்று பல மாநில அரசுகள் உத்தரவிட்டுள்ளன. தடுப்பூசி போட வேண்டும் என்றும் நெருக்கடி கொடுத்து வருகிறது. தடுப்பூசி போட்டுக்கொண்டால் தான் அனுமதி என்று கோயில்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கட்டாயப்படுத்துகின்றனர். மத்திய அரசு நிர்ப்பந்திக்கவில்லை என்றாலும் சில மாநில அரசுகள் தடுப்பூசி கட்டாயம் போட வேண்டும்என்று உத்தரவிட்டுள்ளது. தடுப்பூசி போடாதவர்களை சில இடங்களில் அனுமதிக்காதது. தனிநபர் சுதந்திரத்தில் தலையிடுவது ஆகும். இப்படி கட்டாயப்படுத்துவது மனித உரிமைகளை மீறிய செயல் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் மட்டும் தான் பொது இடங்கள். பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், விடுதிகள், ஓட்டல்கள், தொழிற்சாலைகள், கடைகள் மற்றும் வணிகவளாகங்களில் அனுமதிக்கப்படுவார்கள் என்று தமிழ்நாடு அரசு கடந்த நவம்பர் மாதம் 18ம் தேதி பிறப்பித்த உத்தரவையும் மேற்கோளாக மனுதாரர் காட்டி இருந்தார்.

இதை விசாரித்த நீதிபதிகள், கொரோனா தடுப்பூசிபோட்டுக் கொள்ளவேண்டும் என்று குடிமக்களை கட்டாயப்படுத்தக்கூடாது. தடுப்பூசி போட்டுக்கொள்வதா வேண்டாமா என்பது அவரவர் சுய விருப்பத்தைப் பொறுத்தது. தடுப்பூசி போடாதவர்களால் மற்றவர்களுக்கு சுகாதார ரீதியாக ஆபத்து இருப்பதாக கருதினால், தனிப்பட்டவர்களின் உரிமைகள் மீது நியாயமான கட்டுப்பாடுகளை



விதிக்கலாம் . இந்திய அரசின் தடுப்பூசி கொள்கை என்பது உலக சுகாதார கழகத்தின் வழிகாட்டுதல்களின்படி சிறப்பானதாகவே இருக்கிறது. இந்தநிலையில் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் மீது மாநில அரசுகள் கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடாது. தடுப்பூசி போடுவதை கட்டாயம் ஆக்கக்கூடாது என்று தீர்ப்பளிக்கப்பட்டு உள்ளது.

நீதிபதிகள் நாகேஸ்வரராவ், பி.ஆர்.கவாய் ஆகியோர் அடங்கிய ஆயம் தனது 115 பக்க தீர்ப்பில், மத்திய அரசு சமர்ப்பித்த விஞ்ஞான ரீதியான ஆவணங்களையும், அரசின் தடுப்பூசி கொள்கைக்கு எதிராக மனு தாரர் அளித்த ஆவணங்களையும் சீர்தூக்கிப் பார்த்து பல நியாயங்களையும் எடுத்துரைத்தது. அரசியல் சட்ட பிரிவு 21ன் படி குடிமகன்கள் உடல்ரீ தியாக பாதுகாக்கப் பட்டு உள்ளனர். யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. எப்படி வாழ வேண்டும் என்பது அவரவர் தனிப்பட்ட உரிமை ஆகும். எந்த ஒரு மருத்துவ சிகிச்சையும் ஏற்றுக்கொள்ள மறுப்பது தனிநபர் சுதந்திரம் ஆகும். இருப்பினும் சிலரால் தொற்று பரவி மற்றவர்களுக்கும் சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் என்றால் தனிநபர் சுதந்திரங்களின் மீது சில நியாயமான கட்டுப்பாடுகளை அரசு விதித்துக் கொள்ளலாம். தொற்றுக்களை பரவாமல் தடுக்க அரசின் தடுப்பூசி கொள்கையை நியாயமற்றது என்று கூற முடியாது என்று தீர்ப்பில் சுட்டிக்காட்டி உள்ளனர்.தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்களை பாரபட்சமாக நடத்தவில்லை என்பதற்கு சான்றாக மத்திய மாநில அரசுகள் எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்பதையும் நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பின், அவர்களால் மற்றவர்களுக்கு பரவி விடக்கூடாதே என்பதற்காக அவர்களை தடுப்பூசி போட்டுக்கொள்ளும்படி அரசு அறிவுறுத்துவது நிர்ப்பந்தம் அல்ல என்றும் இந்த தீர்ப்பு தெளிவாக கூறி உள்ளது.

# கேப்டன் பதவியில் இருந்து ஜடேஜா விலக காரணம்..?

## எம்.எஸ்.தோனி விளக்கம்



ஐதராபாத் அணியுடனான வெற்றிக்கு பிறகு சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டன் எம்.எஸ்.தோனி பேசியதாவது:

பேட்ஸ்மேன்கள் சிறப்பாக விளையாடி எங்களுக்கு நல்ல இலக்கை வெற்றிக்கரமாக பந்துவீச வழங்கினர். ஆனால் நாங்கள் முதல் 2 ஓவரிலே 25 ரன்கள் விட்டு கொடுத்தோம். இதனால் வித்தியாசமான முறையில் பந்துவீசும் சூழலுக்கு பந்துவீச்சாளர்கள் தள்ளப்பட்டனர்.

ஒரு ஓவரில் 4 சிக்சர்கள் சென்றாலும் கவலைப்படாதீர்கள், எஞ்சிய 2 பந்தை வைத்து எதையாவது செய்யுங்கள் என எப்போதும் நான் சொல்வேன். என்னுடைய இந்த கருத்தை மற்றவர்கள் ஏற்பார்களா என தெரியாது. எங்களுடைய சுழற்பந்து வீச்சாளர்கள் 7வது ஓவரிலிருந்து 14வது ஓவர் வரை கட்டுக்கோப்பாக பந்துவீசினர்.

கடந்த ஆண்டே ஜடேஜாவுக்கு அவர் தான் இந்த சீசனில் கேப்டனாக செயல்படப் போகிறார் என தெரியும். முதல் 2 போட்டியில் ஜடேஜாவின் கேப்டன் பொறுப்பை நான்தான் கவனித்தேன். அதன்பிறகு ஜடேஜாவிடம் நீ தான் முடிவுகளை அணிக்காக எடுக்க வேண்டும் என்று கூறினேன். கேப்டனாக பொறுப்பேற்கும் போது பல விஷயங்களில் துணிந்து முடிவெடுக்க வேண்டும் என கூறியிருந்தேன். ஆனால், தொடர் செல்ல செல்ல, கேப்டன்ஷிப்பின் அழுத்தம் அவரது பேட்டிங் மற்றும் பந்துவீச்சை பாதிக்க செய்தது. அவரது மனதும் சோர்வடைந்தது. இதனால் தான் ஜடேஜா விலகினார் என தெரிவித்தார்.

# இலங்கைத் தமிழர்களுக்கு மீண்டும் சோதனை

## அகதிகளாக படையெடுக்கும் அவலம்


இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக உணவு, அத்தியாவசிய பொருட்களின் விலை தாறுமாறாக ஏறி உள்ளது. மக்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறி ஆகி உள்ளது. பிழைக்க வழி இன்றி தமிழர்கள் அவதிப்படுகிறார்கள். இந்த நிலையில் தான் மீண்டும் தமிழ்நாட்டுக்கு ஈழத்தமிழர்கள் அகதிகளாக வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மாத துவக்கத்திலேயே 75 இலங்கை தமிழர்கள் தமிழகத்திற்கு அகதிகளாக வந்துள்ளனர். அவர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர் .

2 மாத கை குழந்தையுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் 5 பேர் அகதிகளாக ராமேஸ்வரம் வந்துள்ளனர். கைக்குழந்தையின் பசியை அடக்கக்கூட முடியவில்லை. அதனால் தான் தமிழகம் வந்து விட்டோம்என்றனர். அதே சமயத்தில் அல்லைப்பிட்டி கடல் பகுதி வழியாக தமிழகம் வர முற்பட்ட4 தமிழர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை மக்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டிய தருணம் இது.அவர்களுக்கு உதவிடும் வகையில் திமுக சார்பில் ஒரு கோடி ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும் இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில், தேவையான உதவிகளை செய்திட நன்கொடைகள் வழங்கிடுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். திமுக எம்.எல்.ஏக்கள் அனைவரின் ஒரு மாத ஊதியத்தையும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அளிக்க முன் வந்துள்ளனர்.

மேலும், தமிழ்நாட்டில் இருந்து உணவு, உயிர் காக்கும் மருந்துகள், அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைக்க இந்திய அரசிடம் தமிழ்நாடு அரசு அனுமதி கேட்டிருந்தது. இதற்கு ஒப்புதல் கிடைத்துள்ளது.

இதையடுத்து, முதல்கட்டமாக, தமிழ்நாட்டில் இருந்து 40 ஆயிரம் டன் அரிசி, 500 டன் பால் பவுடர் மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் அரசு அதிகாரிகள் கூறினர். தமிழக அரசின் உதவிக்காக முதல்வர் ஸ்டாலினுக்கு இலங்கை எம்.பி.க்கள் சுமந்திரன், ஜீவன் தொண்டைமான் நன்றிதெரிவித்துள்ளனர்.



HOTEL BILL IN SRILANKA

ShanmugaS
"The Vegetarian Restaurant"

53/3, Ramakrishana Road, Colombo-06

Phone : 0112361384/0112559203

*** Bill No - 248 ***

DINE_IN

Order ID# : 278355 Table# :A10
Cashier# :Anoma Guests# : 3
Captain# : Yogesh
Date : 22/04/2022, 10:12 PM

| ITEM NAME | PRICE | QT | SUB |
|---|---|---|---|
| Curd vadai | 350.00 | 2 | 700.00 |
| Sambar vadai | 350.00 | 1 | 350.00 |
| Onion rava dosai | 750.00 | 1 | 750.00 |
| Idly- 2pcs | 350.00 | 1 | 350.00 |
| Butter naan | 400.00 | 2 | 800.00 |
| Chillie paneer gravy (M) | 1,100.00 | 1 | 1,100.00 |
| Mineral water | 100.00 | 1 | 100.00 |
| Filter coffee | 300.00 | 2 | 600.00 |

Sub Total RS 4,750.00

Total RS 4,750.00

It's been a pleasure serving you

Technology Partner www.foodenginepos.com
Tel : +94 77 269 5858

### கடவுளின் சாபமா?

இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள சிக்கலுக்கு கடவுளின் சாபம் தான் காரணம் என்கிறார் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் கூறினார். யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த விதி பூஜையும் இன்றி விஷ்ணு ஆலயம். சிவன் கோயில் உள்பட 4 இந்து ஆலயங்கள் பூட்டியே கிடக்கின்றன. அந்த கோயில்களில் உள்ள கடவுள்களின் சாபம் தான் நாட்டின் இன்றைய நிலைக்கு காரணம் என்று அவர் குற்றம் சாட்டினார்.

# கலாச்சாரத்தை சீரழிக்கும் சின்னத்திரை தொடர்கள்!

மக்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கத்தை ஒழித்து, மக்களை ஒரே இடத்தில் முடக்கி வைத்ததே சின்னத்திரை தொடர்கள்தான். வார, மாத இதழ்களை வாசிக்காமல் டிவி தொடர்களை பார்ப்பதால், அவற்றின் விற்பனை பாதிக்கப்பட்டு முற்றிலுமாக மாத,வார பத்திரிகைகள் நின்று போயின. நாளிதழ்கள் படிக்கும் பழக்கமும் குறைந்து போனதால், பல பத்திரிகைகளின் விற்பனை படுமோசமாகி, பக்கங்களை குறைத்துக்கொண்டனர். ஒரு பிரிவு மக்களின் வாழ்வாதாரத்தை தொலைத்த பெருமையும் சின்னத்திரைக்கு உண்டு.

அதோடு சின்னத்திரை நின்றதா என்றால், இல்லை. தொடர்களின் சண்டைக்காட்சிகளை அறிமுகம் செய்து, கட்டிப்பிடிக்கிற காட்சிகளையும்வைத்து மக்களை முகம் சுழிக்க வைக்கிறார்கள். அத்துடன் சின்னத்திரைத் தொடர்களில் கலாச்சார சீரழிவுகளையும் மையமாக்கி காட்டுகிறார்கள். அடுத்தவள் கணவர் மீது இன்னொருவர் ஆசைப்படுவதும், அவரை அடைய பல முயற்சிகளை செய்வதும் மையக் கருத்தாகிவிட்டது. இதே போல அடுத்தவர் மனைவியை அபகரிக்கும் வகையில் ஆசை வார்த்தைகள் காட்டுவதும் கதையின் மையப்புள்ளி ஆகி விட்டது. நடிகை ராதிகாவின் சித்தி தொடங்கி இப்போது சித்தி 2 வரையிலும் அடுத்தவன் புருஷன் மீது ஆசைப்படுவது தொடர்கதை ஆகிறது. விஜய்டிவியில் வருகிற சீரியல்களிலும் இதன் தாக்கம் உள்ளது. பாரதி கண்ணம்மா தொடரில் டாக்டர்பாரதி இன்னொருவரின் கணவர் என்ற போதிலும், மனைவியிடம் இருந்து அவரைப் பிரித்து அவரை அடையும் முயற்சியில் ஒரு பெண் டாக்டர் ஈடுபடுவதாக காட்டுகிறார்கள். அதற்காக குழந்தையை கடத்துவது உள்ளிட்ட சட்ட விரோத காரியங்களில் எல்லாம் அவர் ஈடுபடுவதாக தொடர்

**“கலாச்சார சீரழிவுகளை தடுக்க வேண்டும் என்றால் தொலைக்காட்சித் தொடர்களுக்கும் தணிக்கை முறை கொண்டு வரவேண்டும்.”**



போகிறது. சுந்தரி தொடரில்2 பெண்டாட்டிகளை கட்டிக் கொண்டு கிராமத்து மனைவிக்கு கணவன் துரோகம் செய்வது போன்ற காட்சிகள் ஏராளம்

பாக்கியலட்சுமி தொடரில் மனைவி, குடும்பத்தை விட்டு கள்ளக்காதலியே கதி என்று கிடக்கிறபடி கோபி கதாபாத்திரம் உருவாக்கப்பட்டு உள்ளது. மனைவிக்கே தெரியாமல் கையெழுத்து வாங்கி விவாகரத்து மனு தாக்கல் செய்வதாக காட்டுகிறார்கள். எங்க அம்மாவை கல்யாணம் பண்ணிக்கப் போகிற அங்கிள் இவர் தான் என்று ராதிகா மகள் சொல்வதும், எங்க அப்பா இன்னொரு கல்யாணம் செய்தால் அப்பா பக்கம் தான் நிற்பேன் என்று கோபியின் மகள் சொல்வதும், கள்ளக்காதலியுடன் ஊர் சுற்றுவதை மறைக்க எப்போது பார்த்தாலும் முக்கியமான மீட்டிங்கில் இருந்தேன் என்று பொய்களை அடுக்குவதும்... கலாச்சார சீரழிவின் உச்சங்கள். ராஜா ராணி சீரியலிலும் குடும்பத்தை கெடுப்பதற்காக ஒரு மருமகளே சதிச்செயல்களில் ஈடுபடுவதும் கொடுமைக்காரத் தொடர்கள். சினிமாவில் பார்த்த அடிதடிகளை இப்போது சின்னத்திரைகளிலும் காட்டுகிறார்கள். இதனால் பிஞ்சுகளின் மனதிலும் நஞ்சை விதைக்கிறார்கள்.

இப்படியே தொடர்கள் போனால் தமிழகத்தில் கலாச்சார சீரழிவுகளையும் மாமியார்– மருமகள் சண்டைகளையும் வீட்டுக்கு வீடு அரங்கேற்றி விடுவார்கள். இது போன்ற கலாச்சார சீரழிவுகளை தடுக்க வேண்டும் என்றால் தொலைக்காட்சித் தொடர்களுக்கும் தணிக்கை முறை கொண்டு வரவேண்டும்.

ஒவ்வொரு தொடரின் கடைசியிலும் பொறுப்பு துறப்பு என்று தொலைக்காட்சி நிறுவனங்கள் தப்பிக்க விடக்கூடாது. இது போன்ற சீரழிவுகளை வெளிக்காட்டுகிற நிறுவனங்கள் தான் அதற்கு பொறுப்பு ஏற்கவேண்டுமே தவிர, எங்களுக்கு தொடர்பில்லை என்று தட்டிச் செல்ல அனுமதிக்கக்கூடாது.எனவே மத்திய மாநில அரசுகள் சின்னத் திரை தொடர்கள் விவகாரத்தில் கவனம் செலுத்தி கலாச்சார சீரழிவு காட்சிகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும்.

# திருமணம் குறித்து மனம் திறந்த விக்னேஷ் சிவன்




நயன்தாராவும் விக்னேஷ் சிவனும் காதலித்து வருவது பலருக்கும் தெரிந்த விஷயம். இந்தக் காதல் எப்போது உருவானது என்பது பற்றி விக்னேஷ் சிவனே கூறியிருக்கிறார். காத்துவாக்குல ரெண்டு காதல் பட நிகழ்ச்சியின்போது அவர் கூறியதாவது, “எங்கள் ரிலேஷன்ஷிப் ஆரம்பித்த புதிதில்தான் நானும் ரவுடி தான் படத்தின் இன்டர்வெல் பிளாக் எடுத்து கொண்டிருந்தோம். அதில் முக்கியமான ஒரு ஷாட்டில் சாரும், நயனும் லிப்லாக் செய்யும் காட்சிக்கு முன்னதாக உதட்டின் அருகில் உதடு வைத்து பேசிக் கொண்டிருப்பார்கள். அந்த ஷாட்டை வேறு மாதிரி எடுத்துக் கொள்ளலாம் என்று நயன் சொன்னார்.

நான்தான் இதிலென்ன இருக்கு எடுக்கலாம், ரொம்ப முக்கியமான ஷாட், அப்படிதான் செய்யனும் என்று எடுத்தோம். அந்த சீன் எடுக்கும் போது, இன்னும் நெருக்கமாக வாங்க... இன்னும் வாங்க என நான் சொன்னதால் கடுப்பான நயன்தாரா, மெதுவாக பக்கத்தில் வந்து, ‘சைக்கோ’ என திட்டிவிட்டு போனார்”, என்றார். நானும் ரவுடி தான் படம் முடிந்ததும், இன்னொரு செமயான படம் பண்ணிய பிறகு தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என முடிவு செய்து விட்டோம் என்று கூறியிருந்தார் விக்னேஷ் சிவன்.

# கவர்ச்சிக்கு எல்லை உண்டு..!

முன்னணி நடிகைகள் பலர் கவர்ச்சிக்கு மாறி உள்ளனர். ஒரு பாடலுக்கு அரைகுறை உடையில், கவர்ச்சியாக குத்தாட்டம் ஆடவும் கதாநாயகிகள் சம்மதிக்கின்றனர். சமீபத்தில் திரைக்கு வந்த புஷ்பா படத்தில் ஊ சொல்றியா மாமா பாடலில், சமந்தா ஒரு பாடலுக்கு ஆடிய கவர்ச்சி நடனம் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

இந்நிலையில், குடும்ப பாங்கான கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்து வரும் கீர்த்தி சுரேசிடம் கவர்ச்சியாக நடிப்பீர்களா? குத்தாட்டம் ஆடுவீர்களா? என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்து கீர்த்தி சுரேஷ் கூறும்போது, "நான் சினிமாவில் நடிக்க வந்த ஆரம்பத்தில் இருந்து இப்போது வரை, நடிப்புக்கு முக்கியத்துவம் இருக்கும் கதாபாத்திரங்களின் மீது மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன். எனது அதிர்ஷ்டம் காரணமாக எல்லாமே நல்ல கதாபாத்திரங்களாக அமைந்தன. கவர்ச்சியாக நடிக்கும் விஷயத்தில் எனக்கென்று சில எல்லைகளை வைத்து இருக்கிறேன்.

எந்த நிலையிலும் அதை மீற மாட்டேன். தேகத்தை காட்டி கவர்ச்சியாக நடிக்கும் கதாபாத்திரங்களில் நான் நடிப்பது இல்லை. முந்தைய படங்களில் நான் எப்படி வந்தேனோ அப்படி நடித்தால்தான் ரசிகர்கள் என்னை ஆதரிப்பார்கள் என நம்புகிறேன். எனவே, அதுமாதிரியான கதாபாத்திரங்களில் மட்டுமே நடிப்பேன்'' என்றார்.



# பூஜா ஹெக்டே, ராஷ்மிகா இடையே கடும் போட்டி

ஜூனியர் என்.டி.ஆர். நடித்த ஆர்.ஆர்.ஆர். படம் ரசிகர்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றது. வசூல் ரீதியாகவும் வெற்றிகரமாக அமைந்து விட்டதால் படத்தில் நடித்த என்.டி.ஆரின் அடுத்த படம் எதுவாக இருக்கும் என்ற எதிபார்ப்பு ரசிகர்களிடம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் பிரபலமான ஹீரோக்களுக்கு ஹிட் கொடுத்த இயக்குனர் கொரட்டாலா சிவா படத்தில் நடிக்க இருக்கிறார் என்.டி.ஆர். கொரட்டாலா சிவா தற்போது வெளியாகியிருக்கும் ஆச்சார்யா படத்தை இயக்கி வெளியாகியி இருக்கிறது.

இதனால் அடுத்தப் படத்தைப் பற்றி பேசியிருக்கிறார். சிவா கூறும்போது, "என் அடுத்த படத்தில் என்.டி.ஆர். நடிக்க இருக்கிறார். இதில் அவருக்கு ஜோடியாக முதலில் ஆலியா பட் நடிப்பதாக இருந்தது. ஒப்பந்தம் செய்த பிறகு தவிர்க்க முடியாத காரணத்தால் அவர் விலகிக் கொண்டார். இப்போது ராஷ்மிகாவும், பூஜா ஹெக்டேவும் நடிக்க போட்டி போடுகிறார்கள். காரணம் இது பான் இந்தியா படமாக வர இருக்கிறது. அதிக பட்சமாக ராஷ்மிகாவுக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது" என்று கூறியிருக்கிறார் கொரட்டாலா சிவா.



# இணையத்தில் தனிப்பட்ட புகைப்படங்களை கவனமுடன் பகிருங்கள்




சமூக வலைத்தளங்களில் பதிவிடும் தனிப்பட்ட புகைப்படங்கள், வீடியோக்களை கொண்டு, பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரிக்கின்றன. இணையத்தில், புகைப்படங்களை பதிவிடும் முன் சில விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். அவற்றின் தொகுப்பு இங்கே:

## தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்:

இணையம் வழியாகப் பகிரும் தகவல்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறீர்களா? என்பதை முதலில் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். பகிர்வதால் எந்த விதமான பயனும் இல்லாதபட்சத்தில், முடிந்தவரை அதைத் தவிர்க்க முயலுங்கள். தனிப்பட்ட புகைப்படங்களை அனைவருக்கும் பகிராமல் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மட்டும் அனுப்பலாம்.

## முகத்தைக் காட்டாதீர்கள்:

தனிப்பட்ட படங்களை பிறருக்கு பகிர வேண்டும் என்ற எண்ணத்தில் உறுதியாக இருந்தால், இந்த விஷயத்தைக் கவனத்தில் கொள்ளுங்கள். நெருக்கமான படங்களை பிறருக்குப் பகிர்வதில், முக்கிய விதி ஒன்று உள்ளது. அது, உங்கள் முகத்தைக் காட்டுவதை மறைப்பது. உங்கள், தனிப்பட்ட அடையாளங்களை முடிந்தவரை மறைக்கலாம். அதன் மூலம், உங்களின் நெருக்கமானவர்களைத் தவிர வேறு யாராவது அந்தப் படங்களைப் பார்க்க நேர்ந்தாலும், உங்கள் அடையாளமும், தனி உரிமையும் பாதுகாப்பாக இருக்கும்.

## நம்பிக்கையை உணருங்கள்:

தனிப்பட்ட எந்த தகவலையும் பிறருக்குப் பகிரும் போது, அந்த நபர் உங்களுக்கு நம்பகத்தன்மையுடன் இருப்பது கட்டாயம். எதிர்காலத்தில், அந்த நபரை நீங்கள் பிரிந்து செல்ல நேர்ந்தாலும், உங்கள் தனிப்பட்ட படங்கள், தகவல்கள் பாதுகாப்பாக இருக்குமா? என்பதை உறுதி செய்யுங்கள். நீங்கள் நம்பிக்கை வைக்கும் நபர் பற்றி முதலில் முழுமையாக உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அவர்களைச் சார்ந்தவர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோரைப் பற்றியும் தெரிந்துகொள்ளுதல் அவசியமானது.

## மாற்றுவழி தேடுங்கள்:

உறவை மேம்படுத்த பல வழிகள் உள்ளன. தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்துதான் நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற அவசியமில்லை. அதற்கு மாற்றுவழிகள் உள்ளதா என்பதை ஆராயுங்கள். ரகசியப் படங்களை அனுப்புவது உங்களுக்கு வசதியாக இல்லாவிட்டால், மாற்று வழிகளை பயன்படுத்துங்கள்.

## அடையாளங்களை மறையுங்கள்:

புகைப்படங்களைப் பிறருக்கு பகிர்வதில், கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம், புகைப்படத்தில் உங்கள் அறை, வீடு அல்லது வேறு எந்தத் தகவலையும் கொடுக்கக்கூடாது. பின்னணியை முற்றிலும் மங்கலாக்கலாம் அல்லது வேறு ஒரு பின்னணியை அமைக்கலாம். உங்கள் சுவரை மறைத்து வைக்க, காகிதங்கள் அல்லது வேறு ஏதாவது கொண்டு மூடலாம். அதேபோல், எந்த இடத்தில் இருந்து படங்களைப் பகிர்கிறீர்கள் என்ற தகவலையும் முடிந்தவரை மறையுங்கள்.

MAARAN PRINTER, NO 5 RAJESHWARI NAGER, SELVAPURAM, COIMBATORE - 641026.
T. RAJHESHKUMAR , 45 -A SRI KRISHNA TOWERS, 2ND FLOOR, DR NANJAPPA ROAD, GANDHIPURAM, COIMBATORE, 641012


Krishnadaya
Matrimony
இருமனம் இணையும்
திருமணம் நிகழும்,
இணைந்திடுங்கள்..
எங்கள்
இணையதளத்தில்..
www.krishnadayamatrimony.com


உருவாக்குவோம் ஒரு
புதிய தலைமுறையை
இணைந்திருப்போம்
இயற்கையோடு
ahilnaturals@gmail.com
Ahil
Naturals


HAPPY
PROPERTIES
Digital platform for buying
& selling properties, and
property management
Promote your
Premium
Properties
Digitally
Builders
Promoters
Construction Companies
Real Estate Companies
www.happyproperties.in | +91 98436 23239